


## 1

கோவை மத்திய சிறைச்சாலை. காலை ஆறு மணி.

இரண்டு வார்டன்கள் பார்டர் போட்ட மாதிரி லத்திகளோடு வர - நடுவே அந்த இளைஞன் கட்டம் போட்ட அரைக்கால் ட்ராயரோடும், 'தொள, தொள' சட்டையோடும் அலட்சியப் பார்வை பார்த்தபடி வந்தான். முப்பது வயது இருக்கலாம். சிவப்பு நிறம். அடர்த்தியான கருண்ட கேசம். இடது பக்கக் கன்னத்தில் - கிருதாவின் ஓரமாய் - ஒரு அங்குல நீளத்துக்கு தழும்பு ஒன்று தெரிந்தது.

லெட்ஜரின் ஒரு பக்கத்தில் கவனமாய் இருந்த - ஜெயில் சூப்ரிண்டெண்ட் நிமிர்ந்தார். அந்த இளைஞன் புன்னகைத்தான்.

''குட்மார்னிங் ஸார்...''

சூப்ரிண்டெண்ட் சிரித்தார்.

''இன்னிக்கு உனக்கு நிஜமாவே குட்மார்னிங் தான்... மது! விடுதலையாகப் போறே! நீ ஜெயிலுக்கு வந்தப்ப உடுத்திகிட்டு வந்த ட்ரஸ் பக்கத்து ரூம்ல இருக்கு. போய் போட்டுகிட்டு வா...''

மது பக்கத்து அறைக்குள் நுழைந்தான். சுவரோரமாய் போடப்பட்டிருந்த அந்த அழுக்கான மேஜையின் மேல் - அவனுடைய உடைகள் உட்கார்ந்திருந்தன.

கறுப்பு நிற ஸ்டோன் வாஷ் பேண்ட்.

ஒரு ஜெர்கின் கோட்.

மேலாக - அடர்த்தியான சிவப்பில் ஒரு ஜெர்ஸி பனியன்.

மது அந்த பனியனை எடுத்தான். பனியனின் மார்புப் பகுதியில் அந்த வாசகம் தெரிந்தது. '**ஐ டான்ஸ் வித் பீக்காக்ஸ்.**'

அந்த பனியனை இரண்டு கைகளாலும் மெல்ல தடவினான். கண்களில் தேயிலைத் தோட்டமும்,

அதன் பின்னணியில் நீல நிறத்தில் மலைச் சிகரங்களும் தெரிந்தன. சிகரங்களின் உச்சியில் பஞ்சுத் துகள்கள் ஒட்டிக் கொண்ட மாதிரி மேகங்கள்.

வார்டனின் குரல் முதுகுக்குப் பின்னாலிருந்து ஒலித்தது. ''என்ன பார்த்திட்டிருக்கே? அது... உன்னோட ட்ரஸ் தான். சட்டு புட்டுன்னு எடுத்து போட்டுகிட்டு வெளியே வா...''

மது கைதி உடையைக் கழற்றி - மேஜையின் ஒரு ஓரமாய் வைத்து விட்டு - தன்னுடைய உடைகளை அணிந்து கொண்டான். ஐந்து வருட ஜெயில் வாசத்தின் காரணமாய் தளர்ந்து போயிருந்த உடம்புக்கு - எல்லாமே தொள தொளப்பாய் இருந்தது. ஜெர்கினின் ஜிப்பை இழுத்து விட்டுக் கொண்டு - அறையினின்றும் வெளிப்பட்டு சூப்ரிண்டெண்ட்டை நெருங்கினான்.

அவர் லெட்ஜரை அவன் பக்கமாய் நகர்த்தி - கையிலிருந்த பால்பாயிண்ட் பேனாவை நீட்டினார்.

''இங்கே ஒரு கையெழுத்தைப் போடு...''

''எதுக்கு ஸார்?''

''இத்தனை நாளும் நீ ஜெயில்ல வேலை பார்த்ததுக்கான சம்பளம்'' - மது பேனாவை வாங்கி கையெழுத்தைப் போட - சூப்ரிண்டெண்ட் சில நூறு ரூபாய் நோட்டுகளை அவனிடம் நீட்டினார். அவன் பணத்தைப் பார்க்காமல் ஜெயிலரைப் பார்த்தான்.

''ஸார்! ஒரு சின்ன வேண்டுகோள்.''

''என்ன?''

''இந்த பணத்துல... ஏதாவது... ஸ்வீட் வாங்கி... கைதிகள் எல்லார்க்கும் குடுத்துடுங்க ஸார்... இன்னிக்கு என்னோட பிறந்த தினம்... அதுவுமில்லாம விடுதலையாகிப் போகிற தினம்...''

சூப்ரிண்டெண்ட் புன்னகைத்தார். ''உன்னோட நல்ல மனசுக்கு என்னோட நன்றி... மது... வெளியே போய் சந்தோஷமான வாழ்க்கையை ஆரம்பி. முன் கோபத்தையும் ஆத்திரத்தையும் விட்டுடு...''



''சரி... ஸார்'' - தலையசைத்து எல்லோர்க்கும் கும்பிடு போட்டு விட்டு - மெதுவாய் நடந்து - வாசல் கேட்டை நெருங்கி - விக்கெட் கதவைத் திறந்து வெளிப்பட்டான். சூர்ய வெளிச்சம் இதமாய் முகத்தில் பட்டது. ஜெயில் வாசனை கலக்காத காற்று - முகத்தில் வந்து மோதியது.

''சின்னய்யா...''

பக்கவாட்டில் குரல் கேட்க, திரும்பினான்.

வெள்ளை யூனிபார்மில் - கார் டிரைவர் வேலு நின்றிருந்தான்.

''வேலு...''

''கார் கொண்டாந்திருக்கேன் சின்னய்யா...'' - கொஞ்சம் தள்ளி ஒரு வேப்ப மரத்துக்குப் பின்னால் நின்றிருந்த காரைக் காட்டினான்.

''நீ மட்டும்தான் வந்தியா?''

''இல்லீங்கய்யா... அம்மாவும் வந்திருக்காங்க...''

''வா... போகலாம்...''

மது காரை நோக்கி நடக்க - வேலு கொஞ்சம் தள்ளி பவ்யமாய் தொடர்ந்தான். ''அம்மா சௌக்யமா வேலு?''

''சௌக்யம் தாங்கய்யா...''

''கார் புதுசு போலிருக்கு...''

''போன மாசம் அம்மா வாங்கினாங்க. மெர்சிடஸ்.''

''என்னோட வண்டி இருக்கா?''

''இருக்குங்கய்யா... எஸ்டேட்டை சுத்திப் பார்க்கிறதுக்கு அம்மா அந்த வண்டியைத்தான்... எடுத்துகிட்டு போவாங்க.''

சில்வர் நிறத்தில் மெர்சிடஸ் கார் மின்ன - இருவரும் அதை நெருங்கினார்கள். காரின் பின் பக்கக் கதவைத் திறந்து கொண்டு - நாகரத்தினம்மாள் சால்வையை போர்த்திக் கொண்டு கண்களில் நீரோடு இறங்கினாள்.

''மது... என்... ராஜா...''

''அம்மா...''

மது அம்மாவின் காலில் விழுந்து எழுந்தான். எழுந்த மதுவின் முகத்தை நாகரத்தினம்மாள் தன் இரண்டு கைகளாலும் வருடினாள். குரல்

தழுதழுக்க கேட்டாள்.

''முகமெல்லாம் எலும்பு தட்டிப் போயிருக்கேப்பா...''

மது சிரித்தான்.

''ஜெயிலுக்குள்ளாற... பிஸ்தாவும் பாலும் தர மாட்டாங்கம்மா! கேப்பை களியும் கீரைக் குழம்பும்தான்.''

''என்... ரா... ராஜா... போன ஜென்மத்தில... நாம ஏதோ பாவம் பண்ணியிருக்கோம்... இல்லேன்னா இப்படி...''

''அம்மா! நடந்து போனதைப் பத்தி இனிமே பேசி என்ன பிரயோஜனம்? கார்ல ஏறுங்கம்மா... மொதல்ல வீட்டுக்குப் போவோம்...''

இருவரும் பின் சீட்டின் மெத்தென்ற பரப்பில் சாய்ந்தார்கள். வேலு கதவைச் சாத்தி விட்டு - ட்ரைவிங் ஸ்தானத்துக்கு போய் ஸ்டீயரிங்கை டித்தான். கார் நகர்ந்தது. மது கேட்டான்.

''கோத்தகிரியிலிருந்து... இந்த குளிர்ல நீங்க ம்மா வந்தீங்க? வேலுவை மட்டும் அனுப்பிச்சிருந்தா போதுமே?''

நாகரத்தினம்மாள் - சால்வையால் கண்களின் ஈரத்தை ஒற்றிக் கொண்டாள். ''உனக்கு இன்னிக்கு விடுதலைன்னு தெரிஞ்சப்புறம்... என்னால அங்கே உட்கார்ந்திட்டிருக்க முடியுமா மது?''

''கோத்தகிரியிலிருந்து எத்தனை மணிக்கு புறப்பட்டீங்கம்மா?''

''விடியற்காலை நாலு மணிக்கு...''

''இந்த சீசன்ல... கோத்தகிரி பயங்கரமா குளிருமே...''

''நான் குளிரைப் பார்த்திருந்தா... எம்புள்ளை முகத்தை... இப்போ பார்த்திட்டிருக்க முடியுமா?''

கார் - ஜெயிலின் வெளிப்புற காம்பௌண்ட் கேட்டைத் தாண்டியது. டாக்டர் நஞ்சப்பா ரோட்டின் அகலத்தில் பிரவேசித்து - சுலபமாய் வேகம் பிடித்தது.

''வேலு...'' - நாகரத்தினம்மாள் குரல் கொடுத்தாள்.

''அம்மா...''

''முன்னாடி வெச்சுருக்கிற அந்த டிபன்



காரியரை எடு...''

வேலு காரின் வேகத்தைக் குறைத்து - முன் சீட்டில் வைத்திருந்த அந்த சிறிய எவர்சில்வர் டிபன் காரியரை எடுத்துக் கொடுத்தான். மது கேட்டான்.

''என்னம்மா இது?''

''உனக்கு பிடிச்ச... திரட்டுப்பால்... சேவை... பொங்கல்... தக்காளி சட்னி கொண்டாந்திருக்கேன்பா... மது! சாப்பிடு...''

''எனக்கு வேண்டாம்மா...''

''ஏம்பா வேண்டாங்கிறே... கோத்தகிரிக்கு போய் நம்ம வீட்ல சாப்பிடறதுக்கு ரெண்டு மணி நேரமாயிடும். அதான் கொண்டு வந்தேன்... சாப்பிடுப்பா...''

டிபன் காரியரைத் திறந்து - முதல் மூடியை எடுத்து - மகனிடம் நீட்டினாள் நாகரத்தினம்மாள்.

''திரட்டுப்பால்! சாப்பிடு...''

''எனக்கு உன்னை பார்த்ததுல... பசியே இல்லேம்மா... சந்தோஷத்துல வயிறு ரொம்பியிருக்கு...''

''சந்தோஷத்தோடு சந்தோஷமா சாப்பிடு! வேலு! காரை கொஞ்சம் மெதுவா ஓட்டு... பள்ளத்துல இறக்காதே... தம்பி... சாப்பிடுது...''

''சரிங்கம்மா...''

வேலு காரின் வேகத்தைக் குறைத்தான்.

மது ஸ்பூனில் - திரட்டுப்பாலை அள்ளி - வாயில் திணித்துக் கொண்டான். உடம்பின் ஒவ்வொரு செல்லும் இனித்தது.

'அம்மாடி!... எவ்வளவு... நாளைக்கு... அப்புறம்... இப்படி... அம்மாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து...'

''அம்மா...''

''என்ன மது?''

''மாதவிக்கு கல்யாணமாயிடுச்சா?''

''ரெண்டு குழந்தைகளுக்கு... அவ இப்போ அம்மாடா...''

''புருஷனுக்கு என்ன வேலை...?''

''ஊட்டியில் இருக்கிற எஸ்டேட்டுக்கு அவன்தான் கங்காணி...''

''மாதவி இப்போ ஊட்டியில்தான்

இருக்கானா?''

''ஆமா...''

சாப்பிட்டுக் கொண்டே மெதுவாய் -மது யோசிப்பில் விழுந்தான். ஐந்தாண்டுகளுக்கு முன்னால் நடந்த அந்த சம்பவம் கண்களுக்கு முன்னால் அப்படியே - டெலி சினிமா போல் ஓடியது.

அது ஒரு டிசம்பர் மாதம்.

சாயந்தரம் நான்கு மணி.

தேயிலை பறிப்பில் இருந்த பெண்கள் - வேலையை முடித்துக் கொண்டு சரிவில் இறங்கிக் கொண்டிருந்தார்கள். முதுகுகளில் தேயிலைத் துளிர் இலைகள் நிரம்பிய கூடைகள்.

''நிம்மக்கோவ்! ராத்திரி நைட்டன் தியேட்டர்க்கு போலாமா?''

''என்ன படம்?''

''ரஜினி படம்...''

''பேரு?''

''என்னமோ... ராசான்னு சொன்னாங்க...''

''எம் புருஷன் விடுமோ... என்னமோ...? கேட்டுச் சொல்றேன்...''

''அக்கோவ்! சின்ன முதலாளி வர்றாரு... வாயாடாமே நட...''

''ஆளைப் பாத்தியா கமலு மாதிரி! பெண்டாட்டியா வரப்போறவ குடுத்து வெச்சவ...''

''கழுதே... பேசாமே நடடி!''

பெண்கள் கூட்டம் தலை குனிந்தபடி வேகமாய் நடந்து போக - மேட்டில் நின்று - அவர்கள் பேச்சை செவி மடுத்த மது தனக்குள் சிரித்துக் கொண்டான். அவர்கள் கண்ணிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த மது - பங்களாவுக்குத் திரும்பிப் போவதற்காக - தேயிலைப் பாத்தியில் இறங்கிய போது -

அடுத்த பக்கம் மறைவாய் இருந்த தேயிலை பாத்தியினின்றும் பேச்சுக்குரல் எழுந்தது. ஆண் குரல்.

''மாதவி! எத்தினி நாளா... உன்கிட்டே



கேட்டுகிட்டு இருக்கேன். மசிய மாட்டேங்கறியே?''

''கங்காணியய்யா! நான் அந்த மாதிரி பொண்ணு இல்லீங்க. எங்கப்பாரு... எனக்கு மாப்பிள்ளை பார்த்திட்டிருக்காரு...''

''மாப்பிள்ளைதானே? பார்க்கட்டுமே! நீ ஒருத்தனுக்கு நிரந்தர குத்தகைக்கு போறதுக்கு முந்தி - என்னையும் அப்பப்ப... கவனிச்சுக்கோ... வர்ற பொங்கலுக்கு பட்டுப்புடவை எடுத்துக் குடுத்துடறேன்...''

''எனக்கு ஒண்ணும் வேண்டாங்கய்யா... நான் போகணும்... வழியை விடுங்க... எல்லாரும் போயிட்டாங்க...''

''போனா போறாங்க... வா... இப்படி...''

''ச்சி... கையை எடுங்க!''

பேச்சுக்குரல் வந்த பக்கம் மெதுவாய் நடந்து போய் - தேயிலைச் செடிகளைக் கடந்து - சரிவுக்குப் பின்னால் உட்கார்ந்திருந்த - அந்த இரண்டு பேர்க்கும் முன்னால் வந்து 'திடும்' என்று நின்றான்.

கங்காணி பொன்ராஜ் தலைக்கு சுற்றியிருந்த மப்ளரை சட்டென்று அவிழ்த்து கையில் வைத்துக் கொண்டு கும்பிட்டான்.

''ஸார்...''

மாதவி உடல் நடுங்கிக் கொண்டே குழறினாள்.

''அய்யா... இ.. இ... இந்த... ஆ... ஆ... ஆளு...''

''தெரியும்... உன்கிட்டே தப்பா நடந்துக்கப் பார்த்தான். கேட்டுகிட்டுதான் இருந்தேன். நீ... அப்படி தள்ளி நில்லு...''

மாதவி தள்ளி நின்றாள்.

மது கங்காணியை ஏறிட்டான்:

''ஏண்டா... அவ மானத்துக்கு விலை பட்டுப்புடவையா? உனக்கொரு தங்கச்சி இருந்து - நான் அவகிட்டே இது மாதிரி பேரம் பேசினா உனக்கு எப்படி இருக்கும்?''

''ஸார்...''

''உனக்கு எத்தினி வருஷம் சர்வீஸ்டா இங்கே?''

''அஞ்சு வருஷம்...''

''இதுவரைக்கும் எத்தனை பொண்ணுகளுக்கு பட்டுப் புடவை வாங்கிக் குடுத்திருப்பே?''

''ஸ... ஸார்...''

''சொல்லுடா...'' - ஆக்ரோஷமாய் கேட்டுக் கொண்டே - கங்காணி எதிர்பார்க்காத ஒரு விநாடியில் அவன் இடுப்பு பகுதியில் - ஓங்கி ஒரு உதை விட்டான் மது.

கங்காணி ஒரு தேயிலைச் செடியை நாசப் படுத்திக் கொண்டு உருண்டான். மது வேகமாய் நெருங்கி - ஒரு மூட்டை மாதிரி அள்ளினான்.

''சொல்லுடா... எத்தனை பேரை நாசம் பண்ணியிருக்கே?''

இந்த தடவை கங்காணி பொன்ராஜ் சிலிர்த்தான். ஆத்திரக்குரலில் கத்தினான். ''ஸார்... இ... இது... எ... எ... என்னோட... பர்சனல் விஷயம்... வேலை நேரம் முடிஞ்ச பின்னாடி தான்... எனக்குப் பிடிச்ச... பெண்களோடு, இருக்கேன். இதையெல்லாம் நீங்க கண்டுக்காமே... போயி...''

அவனை மேற்கொண்டு பேச விடாமல் பளீரென்று அறைந்தான் மது. ''என்னடா சொன்னே? இது உன்னோட பர்சனல் விஷயமா? என்னோட எஸ்டேட்ல வேலை செய்யற பொண்ணுங்களை நாசம் பண்றது உன்னோட பர்சனல் விஷயமா?'' - சொல்லிக் கொண்டே இன்னொரு தரம் அறைய முயன்ற மதுவின் கையை கப்பென்று பிடித்து நிறுத்தினான்.

''ஸார்... இந்த அடிக்கிற வேலையெல்லாம் என்கிட்ட வேண்டாம். உங்கப்பா உயிரோடு இருந்தவரைக்கும்... தேயிலை பறிப்புக்கு வர்ற பொண்ணுகளை அவர் தொட்டு பார்க்காமே இருந்ததில்லை... நீங்க மட்டும் என்னவாம்? எஸ்டேட்டை சுத்திப் பார்க்கிற சாக்குல பொண்ணுங்களை நோட்டம் விடத்தானே வர்றீங்க?''

''யூ... ராஸ்கல்!'' - மது புலிப் பாய்ச்சலாய் பாய்ந்து கங்காணியின் கழுத்தைப் பற்றினான். ''பெரியவரைப் பத்தியே நீ பேச ஆரம்பிச்சுட்டியா? உன்னை... உன்னை...''

மதுவின் இரும்புப் பிடியில் - கங்காணியின்



கழுத்து வசமாக சிக்கிக் கொள்ள - பிறகு வந்த சில நிமிடங்களில் - நாக்கு கொஞ்சமாய் வெளித் தள்ளி - கண்கள் நின்று போக சரிந்து விழுந்தான்.

நடந்து போன விபரீதம் மனசுக்குள் தீ மாதிரி உறைத்தாலும் பெருமூச்சோடு 'பாடி'யை அங்கேயே போட்டு விட்டு - வீட்டுக்கு வந்து போலீஸுக்கு போன் செய்தான் மது.

போலீஸ் வந்து விசாரணை நடத்திய போது - பணத்தைக் கொடுத்து கேஸை முடக்கப் பார்த்த நாகரத்தினம் அம்மாவை தடுத்து விட்டான் மது. கோர்ட்டில் பகிரங்கமாய் குற்றத்தை ஒப்புக் கொண்டு - வழக்கை ஒரு முடிவுக்கு கொண்டு வந்தான். ஒரு பெண்ணின் மானத்தைக் காப்பாற்ற புரிந்த கொலையாதலால் - ஜட்ஜ் ஐந்து வருஷ தண்டனையோடு தீர்ப்பைச் சொல்லி கேஸுக்கு 'குட்பை' போட்டார்.

''மது!''

நாகரத்தினம்மாள் அவனுடைய தோளைத் தட்ட - மது சுதாரிப்புக்கு வந்தான். கார் வேகமாய் போய் கொண்டிருக்க - வெளியே காரமடை பஜார் தெரிந்தது.

''ம்...''

''என்னப்பா யோசனை?''

''நான் ஜெயிலுக்குப் போன சம்பவத்தை நினைச்சுகிட்டேன்...''

''இனிமே அதையெல்லாம் நினைச்சுப் பார்க்காதே மது! சாக்கடையில தவறிப் போய் கால் பட்டுட்டா... தண்ணி ஊத்தி கழுவி சுத்தப்படுத்திக்கிற மாதிரி... அந்த ஜெயிலுக்கு போன நினைப்பை - மனசிலிருந்து துடைச்சு எடுத்துடு... கோத்தகிரி போனதுமே நீ ஒரு புது மதுவா மாறணும்...''

மது சிரித்தான்.

''நான் என்னிக்குமே ஒரே மதுதாம்மா...''

''பிளாஸ்க்ல காப்பி இருக்கு... ஊத்தி தரட்டுமா?''

''வேண்டாம்மா... எனக்கு இப்போ இருக்கிற ஒரே ஆசை என்ன தெரியுமா?''

''என்ன?''

''வேலு! காரை அப்படி ஓரமா நிறுத்து...''

மது சொன்னதும் டிரைவர் வேலு காரின் வேகத்தைக் குறைத்து ரோட்டோரமாய் ஒதுங்கினான்.

''நீ தள்ளி உட்காரு... காரை நான் ஓட்டறேன்...''

''உங்களுக்கு எதுக்குங்கய்யா சிரமம்...?''

''சிரமமா? அஞ்சு வருஷம் கழிச்சு காரை ஓட்றது எவ்வளவு த்ரில்லிங்கான விஷயம் தெரியுமா? அதுவும் இந்த மாதிரியான இம்போர்ட்டட் காரை ஓட்டிப் பார்க்கணும்ன்னு ரொம்ப நாளாவே எனக்கு ஆசை... ம்... தள்ளி... உட்கார்...''

நாகரத்தினம்மாள் அவன் கையைப் பிடித்தாள்.

''வேண்டாம்பா மது... கார் ஓட்டறதெல்லாம் ஊர்ல போய் பார்த்துக்கலாம்...''

''இல்லேம்மா... எனக்கு ஆசையா இருக்கு... அரவேணு வரைக்கும் நான் ஓட்டிட்டு வர்றேன். அப்புறம்... வேலு ஓட்டட்டும்...'' - சொல்லிக் கொண்டே காரினின்றும் இறங்கி - ட்ரைவிங் சீட்டுக்குப் போனான் மது. ஸ்டியரிங்கைப் பிடித்து - ஆக்ஸிலேட்டரை அழுத்தினான்.

கார் ஒரு ஸ்பாஞ்ச் துண்டமாய் பறந்தது.

''பார்த்து ஓட்டுப்பா மது...''

''எனக்கு பழக்கம் விட்டு போயிருக்கும்ன்னு நினைக்கறீங்களாம்மா?''

''நான் அதுக்காக சொல்லலை மது... இந்தக் கார் உனக்கு பழக்கமில்லாத காராச்சேன்னு சொன்னேன்...''

''எந்தக் காரா இருந்தா என்னம்மா?'' - சிரித்துக் கொண்டே ஆக்ஸிலேட்டரை அழுத்திப் பிடித்தான்.

ஐந்தே நிமிஷம்

மேட்டுப்பாளையம் வந்தது. மேட்டுப்பாளையத்தின் நெரிசலான வீதிகளில் - காரை சிரமமாய் நகர்த்தி - கோத்தகிரி போகும் மலைப்பாதையின் ஆரம்பத்தை தொட்டான். பாதையின் இரண்டு பக்கமும் - மரங்கள் குபீர் உயரங்களோடு தெரிய - குளிர் காற்று அடித்தது.

''காட் ரோடு புதுசா போட்டிருக்காங்களா வேலு...?''



''ஆமாங்கய்யா... போன வருஷம் ஜனாதிபதி கோத்தகிரிக்கு வந்து கார்டைட் பாக்டரியை ஆரம்பிச்சு வெச்சார். அப்போ புதுசா ரோடு போட்டாங்க...''

கார் மேலே ஏற ஆரம்பித்தது.

ஜக்கனாரை வரைக்கும் இரண்டொரு சேரன் பஸ்கள் தெரிந்தன. அதற்கு பின் - கோத்தகிரி போகும் ரோடு நிசப்தமாக வந்தது. பனி மேகங்கள் கூட்டம் கூட்டமாய் மரங்களுக்கு மத்தியில் ஊர்ந்தன.

கார் ஒரு ஹேர்பின் பெண்ட் வளைவை முடித்துக் கொண்டு திரும்பிய போது - சாலையின் ஓரமாய் -

அந்த ஸ்கூட்டர் நின்றிருந்தது.

கொஞ்சம் தள்ளி - மரத்துக்கு சாய்ந்து உட்கார்ந்தபடி - ஒரு கர்ப்பிணிப் பெண் தெரிய - இளைஞன் ஒருவன் தண்ணீர் நனைந்த கர்ச்சிப்பால் அவளுடைய முகத்தை ஒற்றிக் கொண்டிருந்தான்.

''ஷ்... ஊ... ஷ்... ஊ...''

''ம்...''

''இப்ப எப்படியிருக்கு?''

''என்னால முடியலைங்க...''

மது காரை நிறுத்தி - வெளியே தலையை நீட்டி கேட்டான்.

''என்னாச்சு?''

அந்த இளைஞன் பதட்டமாய் கார் அருகே ஓடி வந்தான். ''ஸார்! என் ஒய்ஃபை ஹாஸ்பிட்டலுக்கு கொண்டுட்டு போகணும் ஸார். ஸ்கூட்டர்ல போயிட்டிருக்கும் போது திடீர்ன்னு வலி வந்துடுச்சு...''

''எந்த ஹாஸ்பிட்டல் போகணும்?''

''பக்கத்தில் இருக்கிற அரவேணு ஹாஸ்பிட்டலுக்குத்தான் ஸார். கொஞ்சம் ஹெல்ப் பண்ணுங்க ஸார். இது அவளுக்கு தலைப்பிரசவம்...''

நாகரத்தினம்மாள் பின் சீட்டிலிருந்து குரல் கொடுத்தாள்.

''போய் கூட்டிட்டு வாப்பா...''

அந்த இளைஞன் ஓடிப் போய் - மரத்துக்கு

சாய்ந்து உட்கார்ந்திருந்த பெண்ணை காருக்கு கூட்
வந்தான்.

டிரைவர் வேலு காரின் பின் பக்கக் கதவை
திறந்து வைத்துக் கொள்ள - அந்தப் பெண் த
வயிற்றைத் தூக்கிக் கொண்டு சிரமமாய் உள்ளே
போனாள். தொடர்ந்து அந்த இளைஞ
நுழைந்தான்.

நாகரத்தினம்மாள் சொன்னாள். ''எம்ப
இவ்வளவு நிறைமாசமா இருக்கும்போது
ஸ்கூட்டர்ல கூட்டிட்டு வரலாமா?''

''ஆரவேணு ஹாஸ்பிட்டல் பக்கமாதானே
இருக்குன்னு கூட்டிட்டு வந்துட்டேன்மா...''

கார் கிளம்பியது.

வயிற்றை இரண்டு கைகளாலும் பற்றி
கொண்டு - பற்களைக் கடித்தபடி அரற்றி
கொண்டிருந்த - அந்தப் பெண் 'திடும்'மென்று
நேராய் எழுந்து உட்கார்ந்தாள். இடுப்பு
மறைவிலிருந்து ஒரு பிஸ்டல் வெளிப்பட்டு
நாகரத்தினம்மாளின் நெற்றிப் பொட்டில் 'ஜில்
வென்று உட்கார்ந்தது!

---

## 2

---

கோத்தகிரியிலிருந்து அந்தக் கார் வெகு
வேகமாய் கீழே இறங்கிக் கொண்டிருந்தது. சந்தன
நிற பியட் கார். காரை ஓட்டிக் கொண்டிருந்த ரசிகா
சல்வார் கம்மீஸில் ஐஸ்கிரீம் தளதளப்போடு
தெரிந்தாள். சென்ற வருடம் பி.எஸ்ஸி., முடித்
மாணவி. அவளுக்குப் பக்கத்தில் அவளுடைய
அண்ணன் கிருஷ்ண மூர்த்தி - ப்ளம்ஸ் பழத்தை
கொறித்துக் கொட்டையைத் துப்பிக் கொண்டி
ருந்தான். ரசிகா அவன் தோளை இடித்தாள்.

''அண்ணா...''

''ம்...''

''கோயமுத்தூர்ல இன்னிக்கு தங்கப் போறோமா...
இல்லை... திரும்பி வந்துடப் போறோமா...?''

''ஆடிட்டர் என்ன சொல்றாரோ...
அப்படித்தான்.''



''பேசாமே... இந்த ஃபேக்டரியை மூடிட்டு... கோயமுத்தூர்ல போய் 'செட்டில்' ஆயிடலாம்...''

''என்ன சொல்றே? ஃபேக்டரியை மூடறதா? அப்பாவோட ஆவியும் அம்மாவோட ஆவியும்... உன்னையும் என்னையும் சும்மா விடாது. அதுவுமில்லாமே நம்ம ஃபாக்டரியை நம்பி - நூறு குடும்பம் வாழுது...''

''அதுக்காக நாம சாகணுமா? எப்பப்பாரு... ஸ்ட்ரைக்... வேலை நிறுத்தம்... சம்பள உயர்வு... பேச்சு வார்த்தை... போராட்டம்... பஞ்சப்படி உயர்வு... இதே வார்த்தைகள் தான்! என்னிக்காவது அந்த ஃபாக்டரியினாலே... நமக்கு நிம்மதி இருந்திருக்கா?''

கிருஷ்ணமூர்த்தி தன் மூக்குக் கண்ணாடியை சரிப்படுத்திக் கொண்டு சிரித்தான். ''இந்த நீலகிரி டிஸ்ட்ரிக்ட்ல இருக்கிற எல்லா ஃபாக்டரியோட நிலைமையும் இப்படித்தான்... தொழிலாளர்கள்னு சொன்னாலே போராடத்தான் செய்வாங்க... சில போராட்டங்களுக்கு வளைஞ்சு கொடுக்கணும். சில போராட்டங்களுக்கு நிமிர்ந்து நிக்கணும்...''

''எனக்கென்னமோ பிடிக்கவேயில்லை...''

''சரி... சரி... அந்த வால்பேரி பாக்கெட்டை எடு...''

''நீ... திங்கறதுக்குத்தான் லாயக்கு...''

''ஏன்... கல்யாணம் பண்ணிக்ககூட நான் லாயக்குத்தான்...'' - புன்னகையோடு சொன்ன அண்ணனைப் பார்த்து - தன் பெரிய கண்களினால் முறைத்தாள் ரசிகா.

கார் கொட்டக்கொம்பையைத் தாண்டிக் கொண்டிருந்தது.

---

## 3

---

நாகரத்தினம் அம்மாளின் நெற்றியில் ரிவால்வர் பதிந்ததும் - ரியர்வ்யூ கண்ணாடியில் அதைப் பார்த்துவிட்ட மது காரை நிறுத்த முயன்றான். அதே விநாடி - இளைஞனின் கையிலிருந்த ரிவால்வர் வெளிப்பட்டு மதுவின்

பிடரியை வருடியது.

''காரை நிறுத்தாமே ஓட்டணும்... ம்...''

மது காரை நகர்த்தினான் வேகமாய்.

''போய்கிட்டே இருக்கணும். ஏதாவது சில்மிஷம் பண்ணினே... உன்... வயசான அம்மாவோட நெத்தி பொளந்துடும்...''

''யா... யார்... நீங்க...? உ... உங்களுக்கு... எ... என்ன வேணும்?''

அந்த இளைஞன் கோணலாய் சிரித்தான். ''மது! அந்த ரியர்வ்யூ கண்ணாடியில் எம்மூஞ்சியை நல்லா பாரு... நான் யார்ன்னு உனக்கே தெரியும்!''

மது கண்ணாடியில் பார்த்தான். அரை நிமிஷ நேரம் உற்றுப் பார்த்து விட்டு ''தெரியலையே?'' என்றான்.

அந்தப் பெண் குறுக்கிட்டாள்.

''எம் மூஞ்சியைப் பாரு... அப்பவாவது உனக்கு தெரியுதான்னு பார்க்கலாம்...''

மது பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கினான்.

''தெரியலையே?''

''அஞ்சு வருஷம் ஜெயில்ல இருந்துட்டு வந்ததுனாலே உனக்கு எல்லாமே மறந்து போச்சு போலிருக்கு! நீ கழுத்தை நெரிச்சு கொலை செஞ்சியே பொன்ராஜ், அவனுக்குத் தம்பி நான். இது... என்னோட தங்கச்சி.''

நாகரத்தினம் அம்மாள் பயத்தோடு வாய் குழறினாள். ''இ... இ... இ... இப்போ... உங்களுக்கு என்ன வே... வேணும்?''

''உம் மகனோட உயிர் வேணும்... எங்க அண்ணனைக் கொலை செஞ்ச குற்றத்துக்காக - சட்டம் கொடுத்த தண்டனை ரொம்பவும் சாதாரணம். உம்புள்ளை தூக்குல தொங்கியிருந்தா அது நியாயம்...''

மது ஏதோ சொல்வதற்காக திரும்பினான். ரிவால்வர் அவன் பிடரியை அழுத்தியது. ''நீ எந்த சமாதானமும் எங்களுக்கு சொல்ல வேண்டிய அவசியமில்லை. உன்னோட விடுதலை நாளை - உங்கம்மா எவ்வளவு ஆர்வமா எதிர்பார்த்தாளோ... அதைக் காட்டிலும் பத்து மடங்கு ஆர்வமா நாங்க எதிர்பார்த்திட்டிருந்தோம்...''



''எம் பையனை ஒண்ணும் பண்ணிடாதீங்கப்பா...'' - நாகரத்தினம்மாள் அலற - இளைஞன் உறுமினான்.

''உன்னோட பையனுக்கு இன்னிக்குத்தான் உண்மையான விடுதலை நாள். அவன் உடம்பிலிருந்து உயிர்ப் பறவை பறக்கிற நாள்...''

மது குறுக்கிட்டான்.

''உன்னோட கோபமும் - உன் தங்கச்சி கோபமும் எனக்கு நியாயமானதா படலை. பொன்ராஜ் ஒரு அப்பாவிப் பெண்ணைக் கெடுக்கப் பார்த்தான். அவனுக்குப் புத்தி சொல்லித் திருத்தப் பார்த்தேன். என்னையும்... என்னோட அப்பாவையும்... கேவலமா பேசினான். அடிச்சேன். அவனும் என்னைத் தாக்கினான்... அதனால...''

''அவன் கழுத்தை நெரிச்சு கொலை பண்ணிட்டியாக்கும்... நீ ஜெயிலுக்குப் போன பின்னாடி... இந்த கோத்தகிரியில் எத்தனையோ கற்பழிப்பு சம்பவங்கள் நடந்திருக்கும்... அந்தப் பொண்ணுகளையெல்லாம் காப்பாத்த நீ ஏன் வரலை...?''

அந்த இளைஞன் முகம் சிவக்க ஆத்திரமாய் கேட்டுக் கொண்டிருக்கும் போதே -

மதுவுக்கு பக்கத்தில் உட்கார்ந்திருந்த டிரைவர் வேலு - குபீரென்று திரும்பி - அந்தப் பெண்ணின் கையிலிருந்த ரிவால்வரைப் பறிக்க முயன்றான்.

''அண்ணே! அந்த டிரைவர் நாயை சுடு...''

மதுவின் பிடரியை முத்தமிட்டுக் கொண்டிருந்த ரிவால்வர் சட்டென்று நகர்ந்து - வேலுவின் கழுத்தைப் பார்த்து சீறியது.

சைலன்ஸர் பொருத்தப்பட்ட ரிவால்வர் - தோட்டாவை மௌனமாய் அனுப்ப - வேலு ரத்த முகமாய் முன் பக்க கண்ணாடியில் மோதிக் கொண்டு விழுந்தான்.

கண்ணாடியில் ப்ளச் சென்று ஒரு ரத்தச் சிதறல். வேலு முன் சீட்டில் விழுந்து - அறுபட்ட கோழியாய் துடித்து அடங்க -

இளைஞன் உறுமினான்.

''மது! காரை நிறுத்தாமே ஓட்டு...! நீ எங்களைத்

தாக்க முயற்சி பண்ணினா... வேலுவோட கதி உங்கம்மாவுக்கும் ஏற்படும். நாங்க நினைச்சா இந்த நிமிஷமே... உன்னை கட்டுத் தள்ளிட்டு போயிட்டே இருக்கலாம்... ஆனா... உன்னை நிமிஷ நேரத்துல சாகடிக்க நான் விரும்பலை... எங்க இடத்துக்கு உன்னைக் கொண்டு போய் - உங்க அம்மா கண் முன்னாடியே கொஞ்சம் கொஞ்சமா... சித்ரவதை பண்ணி சாகடிக்கப் போகிறோம்...''

வேலு நிசப்தமாகியிருந்தான்.

முன்புற கண்ணாடியில் பட்டிருந்த ரத்தம் - துளித் துளியாய் டாஷ் போர்டின் மேல் சொட்டிக் கொண்டிருந்தது.

அந்தப் பெண் மதுவின் தோளைத் தொட்டாள். ''அந்த டாஷ் போர்டைத் திறந்து - ஏதாவது வேஸ்ட் கிளாத் இருந்தா... எடுத்து - கண்ணாடியில் பட்டிருக்கிற - உன்னோட விசுவாசமான டிரைவர் ரத்தத்தை துடைச்சுடு...''

மது மௌனமாய் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

''சொன்னது காதுல விழலை...?''

மது டாஷ் போர்டைத் திறந்தான். உள்ளேயிருந்த பாலீஷ் துணியை எடுத்துக் கொண்டான். ஒரு கையால் ஸ்டியரிங்கை வளைத்துக் கொண்டே சொன்னான்.

''காரை நிறுத்தித்தான் துடைக்கணும்...''

''சரி... இன்னும் கொஞ்சம் தூரம் போனதும் காரை நிறுத்திக்கலாம். இப்போ எங்கேயும் நிறுத்தாதே... கீழ்த் தட்டப்பள்ளம் வரட்டும்...''

# 4

ரசிகா காரின் வேகத்தை அதிகப்படுத்தினாள். கிருஷ்ணமூர்த்தி அவளுடைய தோளைப் பற்றினான்.

''என்னாச்சு... உனக்கு? ஏன்... இந்த வேகம்...?''

''கோயமுத்தூர் சீக்கிரமா போயிட்டா... ஏதாவது



ஒரு ஏ.ஸி. தியேட்டர்ல காலைக் காட்சி பார்க்கலாமே?''

''ஏன்... ஆடிட்டர்கிட்டே நீ வரலையா?''

''நான் எதுக்காக வரணும்?''

''நம்ம ஃபேக்டரியில் நீயும் ஒரு பார்ட்னர்... தெரியுமா?''

''எனக்கு இந்த ஃபேக்டரி விவகாரங்களே வேண்டாம்... நீயும் ஆடிட்டரும் நம்ம ஃபேக்டரி விவகாரங்களைப் பேசி முடிங்க. நான் கே.ஜி. காம்ப்ளக்ஸுக்கு போய் ஒரு நல்ல படம் பார்த்துட்டு வர்றேன்...''

''எங்கியோ போய்ட்டு வா... எனக்கு அந்த 'க்ராக் ஜாக்' பிஸ்கெட் பாக்கெட்டை எடுத்து குடுத்துடு...''

''சரியான தின்னிப் பண்டாரம்...''

''நீ மட்டும் என்னவாம்? சரியான சினிமா பைத்தியம்...'' என்று சிரித்த கிருஷ்ணமூர்த்தி - ''சரி... சரி... ரோட்டைப் பார்த்து காரை ஓட்டு... எதிர்ல பார்... ஒரு மெர்சிடஸ் கார்... கப்பல் மாதிரி... என்னமா வருது?''

''அட்டகாசமான வண்டி... கார்ன்னா அது கார்... நம்ம காரும் இருக்கே...''

''ஏன்... நம்ம கார்க்கு என்ன குறைச்சல்? அப்பா காலத்திலிருந்து நாய் மாதிரி உழைக்குது...''

''நாய் மாதிரி உழைக்குதா? அதான் சில சமயங்கள்ல எஞ்சின் 'லொள் லொள்'ன்னு சத்தம் போடுது...''

மெர்சிடஸ் கார் வேகமாய் அவர்களைக் கடந்து போக - கிருஷ்ணமூர்த்தி முகம் மாறி - ரசிகாவை ஏறிட்டான்.

''ரசி!''

''ம்...''

''அந்தக் காரை கவனிச்சியா?''

''கவனிச்சேனே...''

''கார்க்குள்ள பார்த்தியா?''

''பார்க்கலை. கார்க்குள்ளே என்ன?''

''துப்பாக்கி முனையில் ஒரு அம்மாவைக் கடத்திகிட்டு போறாங்க...''

காரை 'தட்டென்று' பிரேக் போட்டு

நிறுத்தினாள் ரசிகா.

''என்னண்ணா சொல்றே? ஒரு அம்மாவைக் கடத்திட்டு போறாங்களா?''

''ஆமா! ஒரு வயசான அம்மாவுக்கு அந்தப் பக்கமும், இந்தப் பக்கமும் - ஒரு ஆணும் பொண்ணும் உட்கார்ந்துகிட்டு - கையில பிஸ்டல் வெச்சிருந்தாங்க...''

''நல்லா பார்த்தியா?''

''பார்த்தேன்... பார்த்தேன்...''

''சரி... இப்ப என்ன பண்ணலாம்...?''

''காரை திருப்பு...''

''திருப்பி...?''

''அந்த மெர்சிடஸ் காரை ஃபாலோ பண்ணு...''

''நாம எதுக்கு ஃபாலோ பண்ணணும்? இன்னும் அஞ்சு கிலோ மீட்டர் போனா அரவேணு போலீஸ் ஸ்டேஷன் வந்துடும்... அங்கே போய் தகவல் கொடுத்துட்டு நாம கோயமுத்தூர்க்கு போயிட்டே இருக்கலாம்...''

''ரசி! நாம போலீஸுக்கு போய் தகவல் சொல்றதுக்குள்ளே அந்த அம்மாவை அவங்க ஏதாவது பண்ணிடுவாங்க. நீ காரைத் திருப்பு சொல்றேன்... அந்த கார்க்குள்ளே என்னமோ விபரீதம் நடந்திருக்கு... முன் பக்கக் கண்ணாடியில் கூட ரத்தம் மாதிரி ஏதோ சிதறியிருந்தது...''

ரசிகா காரை ரிவர்ஸ் எடுத்தாள். சிரமமாய் அரை வட்டம் அடித்து - திருப்பினாள்.

மேலே இரண்டாவது வளைவில் மெர்சிடஸ் தெரிந்தது.

''ம்... ஆக்ஸிலேட்டரை அழுத்து...''

ரசிகா அழுத்தினாள்.

''அண்ணா! இது வேண்டாத காரியம்னு எம் மனசுக்குப்படுது... கார்ல இருக்கிறவங்க எப்பேர்ப்பட்டவங்கன்னு நமக்குத் தெரியாது. கையில பிஸ்டல் வேற இருக்கிறதா சொல்றே. வீ... ஆர்... ஹெல்ப்லெஸ்... கொஞ்சம் யோசி!''

''நீயும்... நானும் 'கராத்தே' எதுக்காக கத்து வெச்சிருக்கோம்? காரை வேகமா விரட்டு. அந்த மெர்சிடஸ் காரை ஓவர்டேக் பண்ணி நிறுத்து. அந்த பிஸ்டல் பேர்வழிகள் இறங்கி... நம்மை



ஷூட் பண்றதுக்குள்ளே... நாம அவங்களை தாக்க முடியாதா என்ன?''

''எனக்கென்னமோ இது முட்டாள்தனமா படுது... போலீஸுக்கு இன்ஃபார்ம் பண்ணிடறது பெட்டர்...''

''இந்த நடுக்காட்டுல போலீஸுக்கு எப்படி இன்ஃபார்ம் பண்ணுவே? ரசி... உனக்கு பயமா இருந்தா... இப்படி வா... காரை நான் ஓட்றேன்...''

''வேண்டாம்... நானே ஓட்றேன்...''

''அப்படீன்னா ஆக்ஸிலேட்டரை மிதி...''

ரசிகா ஆக்ஸிலேட்டரை அழுத்தினாள். கார் 'விர்ர்ர்ர்' றென்று சீறியது. மெர்சிடஸ் கார் - மேல் வளைவுகளில் - கண்ணில் பட்டு பட்டு தெரிந்தது.

''அவங்க கார் மெதுவாத்தான் போகுது...''

''நாம ஃபாலோ பண்றோம்னு தெரிஞ்சா... அவ்ங்க காரும் பறக்க ஆரம்பிச்சுடும்...''

''அட! அங்க... பாரு...''

''என்ன?''

''அந்தக் கார் ரோட் டோரமா ஒதுங்கி நிக்குது...''

ரசிகா குனிந்து - மேல் வளைவைப் பார்த்தாள்.

மெர்சிடஸ், மரங்களுக்கு மத்தியில் நின்றிருந்தது.

---

## 5

---

''ம்... ரத்தத்தைத் துடை...'' - இளைஞன் உறுமி - மது கையிலிருந்த பாலீஷ் துணியால் ரத்தத்தை - முன்புறக் கண்ணாடியினின்றும் ஒற்றி எடுத்தான்.

''சீக்கிரம்! ஒரு நிமிஷத்துல ரத்தத்தை சுத்தம் பண்ணியாகணும்...''

''அண்ணே...'' - அந்தப் பெண் குரல் கொடுத்தாள்.

''என்ன?''

''பின்னாடி ஒரு கார் வருது...''

''வந்துட்டு போகட்டும்... நீ பிஸ்டலை கண்ணுல படாமே தாழ்த்திக்கோ...''

''அண்ணே! அந்தக் கார் கீழே இறங்கிட்டிருந்த கார். திடீர்ன்னு இப்போ மேலே வந்துட்டிருக்கு. கொஞ்சம் எச்சரிக்கை தேவை...''

இளைஞன் பின் பக்கக் கண்ணாடி வழியாய் காரைப் பார்த்து விட்டு - மதுவின் முதுகில் ரிவால்வரை வைத்து உசுப்பினான்.

''சீக்கிரமா துடை.''

ரத்தத் துளிகளை அவசர அவசரமாய் -

மது துடைத்துக் கொண்டிருக்கும் போதே - அந்தக் கார் மெர்சிடஸ்ஸுக்கு முன்னால் வந்து நின்றது. பெண் பதட்டப்பட்டாள்.

''அண்ணே!''

''பதறாதே! அவங்க இறங்கி வரட்டும்...''

''அண்ணே! அவங்க இறங்கி வந்தா... செத்துக் கிடக்கிற இந்த டிரைவர் கண்ணுல பட்டுடுவான்... அவங்க இங்கே வர்றதுக்கு முந்தி - நாம இறங்கி கீழே நின்னுடறது நல்லது...''

இளைஞன் மதுவின் முதுகைத் தட்டினான்.

''மொதல்ல நீ இறங்கு. அந்தக் காரிலிருந்து யாராவது இறங்கி வந்து ஏதாவது கேட்டா... நல்ல பதிலா சொல்லி சமாளிக்கணும்... எங்களைக் காட்டிக் கொடுக்கிற மாதிரி ஏதாவது... சொன்னே... இங்கே ஒரு ரத்தக்களரியே நடக்கும். முதல் தோட்டா உங்கம்மா நெஞ்சுலதான் பாயும்...''

மது காரின் கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினான்.

தொடர்ந்து அந்த இளைஞன் ரிவால்வரை இடுப்பில் செருகிக் கொண்டு தரையில் கால் பாவினான். இறங்கும்முன் மெல்லிய குரலில் அந்தப் பெண்ணிடம் சொன்னான்.

''நிலைமை விபரீதமாகிற மாதிரி தெரிந்தால்... இந்த அம்மாவை தயவு தாட்சண்யம் பார்க்காமே சுட்டுடு. அதே மாதிரி... மதுவையும் நான் சுட்டுடறேன்...''

''சரிண்ணே...''

மெர்சிடஸுக்கு முன்பக்கம் போய்நின்ற காரிலிருந்து ரசிகாவும் கிருஷ்ணமூர்த்தியும் இறங்கினார்கள். ரசிகா கிசுகிசுத்தாள்.



''அண்ணா...''

''ம்...''

''நீ சொன்ன மாதிரி ஏதோ விபரீதம் தான். கீழே இறங்கி நிக்கிற ரெண்டு பேரோட பார்வையும் சரியில்லை... அதிலும் பேக் சைட் டோரைத் திறந்துகிட்டு இறங்கி நிக்கிறாளே... அவள் சுத்தமா சரியில்லை...''

''என்ன பண்ணலாம்?''

''காரை ஏன் நிறுத்திட்டீங்கன்னு போய் விசாரிக்கலாம்...''

''சரி... வா...''

கிருஷ்ணமூர்த்தியும் ரசிகாவும் - மெதுவாய் நடந்து மெர்சிடஸ் காரை நெருங்கினார்கள். மது அவர்களை சலனமில்லாமல் பார்த்தான். கிருஷ்ணமூர்த்தி கேட்டான்.

''ஏன் ஸார் காரை நிறுத்திட்டீங்க...?''

''நீ... நீங்க யாரு...?''

''என் பேரு கிருஷ்ணமூர்த்தி. நானும், என் தங்கையும் கோயமுத்தூர் போயிட்டிருக்கோம். மேலே போயிட்டிருந்த உங்க கார் சட்டுன்னு நின்னுடுச்சி. தேவைப்பட்டா உதவலாமேன்னுதான் வந்தேன். ஏதாவது ட்ரபுளா?''

''ஓ... ஓ... ஒண்ணுமில்ல. எஞ்சின் ஹீட்டாயிடுச்சு...''

''முன் பக்கக் கண்ணாடியில்... என்ன சிவப்பு சிவப்பா? ர... ரத்தமா?''

''ஆ... ஆமா... வர்ற வழியில ஒரு மாட்டை அடிச்சுட்டோம்...''

கிருஷ்ணமூர்த்தி கார்க்குள் குனிந்து பார்க்க முயன்ற அதே விநாடி - அந்த இளைஞன் தன் இடுப்பினின்றும் ரிவால்வரை உருவ -

ரசிகா விநாடிக்கும் குறைவான நேரத்தில் - காற்றில் வலது காலை வீசி - அவன் மணிக்கட்டை தெறடித்தாள். ரிவால்வர் பத்தடி உயரத்திற்கு வெட்ட வெளியில் நீந்திக் கொண்டே கீழ் நோக்கி வர - ரசிகா அதை தாவிப் பிடித்தாள்.

அதே விநாடி -

மது காரின் பின் சீட்டுக்கு பாய்ந்து - தன் அம்மாவை சுட முயன்ற - அந்தப் பெண்ணின் கையைப் பற்றி - இழுத்து - ரிவால்வரைத் தட்டி

விட்டான்.

''அம்மா! நீங்க அந்தப் பக்கமா கீழே இறங்குங்க...'' மது கத்த -

நாகரத்தினம்மாள் கீழே இறங்கி - மறு பக்கமாய் நின்று கொள்ள - அந்தப் பெண்ணும் இளைஞனும் - நிலைமையை ஜீரணித்துக் கொண்டு - ரோட்டோர சரிவை நோக்கி ஓடினார்கள்.

கிருஷ்ணமூர்த்தி துரத்த ஆரம்பித்தான்.

''டேய்... ய்... ய்...''

அவர்கள் இருவரும் - புலிப் பாய்ச்சலாய் பாய்ந்து - செடி கொடிகள் அடர்ந்திருந்த சரிவில் குதித்து உருண்டார்கள். சில விநாடிகளில் காணாமல் போனார்கள்!

அந்த அடர்த்திக்குள் இறங்க முயன்ற கிருஷ்ணமூர்த்தியை - பின்னால் ஓடி வந்த மது தடுத்து நிறுத்தினான்.

''வேண்டாம் ஸார்... அவங்க யார் என்கிற விவரம் எனக்குத் தெரியும். போலீஸ்ல சொன்னா அவங்க மடக்கிடுவாங்க... இந்த அடர்த்தியான செடிகளுக்கு மத்தியில... நீங்க அவங்களை ஃபாலோ பண்ணிட்டு போறது உசிதமில்லை. வாங்க கார்க்கு போலாம்...''

கிருஷ்ணமூர்த்தி மதுவோடு கார்க்குத் திரும்பினான். நாகரத்தினம்மாள் ரசிகாவின் இரண்டு கைகளையும் பற்றி - தன் கண்களில் ஒற்றிக் கொண்டிருந்தாள்.

## 6

**கோ**த்தகிரி போலீஸ் ஸ்டேஷன்.

இன்ஸ்பெக்டர் போஜராவ்க்கு எதிரே - மது, கிருஷ்ணமூர்த்தி, நாகரத்தினம்மாள், ரசிகா - எல்லோரும் அரை வட்டமாய் உட்கார்ந்திருந்தார்கள். ஸ்டேஷனுக்கு வெளியே நின்றிருந்த காரையும், கார்க்குள் செத்துக் கிடந்த டிரைவர் வேலுவையும் போலீஸ் போட்டோகிராபர் ஒருவர் க்ளிக்கிக் கொண்டிருந்தார். வேலுவுக்காக மார்ச்சுவரி வேன் ஒன்று - ரோட்டின் எதிர் பக்கத்தில் காத்திருந்தது.



இன்ஸ்பெக்டர் போஜராவ் கேட்டுக் கொண்டிருந்தார்.

''ஸ்கூட்டர்ல வந்த ரெண்டு பேரும் இள வயசு தானே?''

''ஸ்கூட்டர் நீல நிறம் ஸார்... ஆனா நம்பரை கவனிக்கலை...''

''ஆமா... இன்ஸ்பெக்டர்...'' - மது சொன்னான்.

''பொன் ராஜுக்கு கோத்தகிரியில் எங்கே வீடு?''

''அவனுக்கு வீடு கிடையாது ஸார்... எங்க எஸ்டேட்ல வேலை பார்த்திட்டிருந்தப்போ... ஒரு ஹோட்டல்ல ரூம் எடுத்து தங்கிட்டிருந்தான்.''

''அவனுக்கு சொந்த ஊர் எது?''

''மெட்ராஸ்ன்னு சொல்லியிருந்தான்...''

''மெட்ராஸ்ல எந்த அட்ரஸ்ன்னு தெரியுமா?''

''தெரியாது... வருஷத்துக்கு ஒரு தடவை பத்து நாள் லீவு எடுத்துகிட்டு மெட்ராஸ் போய்ட்டு வருவான்...''

''கோத்தகிரியில் அவன் எந்த ஹோட்டல்ல தங்கியிருந்தான்னு சொல்ல முடியுமா?''

''ஐடியல் லாட்ஜ்ல...''

''கிளப் ரோட்டில் இருக்கிற அந்த லாட்ஜ் தானே?''

''ஆமா ஸார்!''

போஜராவ் பக்கவாட்டில் திரும்பி - நேர்க்கோடு மாதிரி நின்றிருந்த கான்ஸ்டபிளை ஏறிட்டார்.

''கான்ஸ்டபிள்! ஐடியல் லாட்ஜுக்குப் போய் - பொன்ராஜோட மெட்ராஸ் அட்ரஸை விசாரிச்சுட்டு - அப்படியே பொன்ராஜுக்கு யார் யார் நெருங்கின தோஸ்த்ங்கிற விவரத்தையும் தெரிஞ்சுட்டு வாங்க...''

''எஸ்... ஸார்...'' - கான்ஸ்டபிள் சல்யூட்டை கொடுத்து விட்டு நகர்ந்தார். போஜராவ் மறுபடியும் மதுவிடம் திரும்பினார்.

''நீங்க ஜெயில்லேருந்து இன்னிக்குத்தான் ரிலீஸாகி வர்றீங்க இல்லையா?''

''ஆமா... ஸார்...''

''இந்த 'விடுதலை விஷயம்' - வெளியே யார் யார்க்குத் தெரியும்?''

''நான் அம்மாவுக்கு மட்டும்தான் தெரியப்படுத்தினேன்...''

''உங்க ஃப்ரெண்ட்ஸ்களுக்கு தெரியப்படுத்தினீங்களா?''

''இல்லை...''

''கர்ப்பிணி வேஷம் போட்ட பொண்ணையும், அந்த யூத்தையும் இதுக்கு முன்னாடி எங்கேயாவது பார்த்திருக்கீங்களா?''

''இல்லை...''

''அம்மா... நீங்க?''

''நானும் பார்த்ததில்லை... இன்ஸ்பெக்டர்...''

ரசிகா குறுக்கிட்டாள். ''ஸார்! கர்ப்பிணி வேஷத்துல வந்த அந்தப் பொண்ணைப் பார்க்கும் போது - அவ ஒரு குடும்பத்து பெண் மாதிரியே எனக்குத் தோணலை... முகத்துல விபச்சாரக்களை அப்பட்டமா தெரியுது...'' - சொல்லச் சொல்ல -

டெலிபோன் குரல் கொடுத்தது.

போஜராவ் ரிஸீவரை எடுத்தார்.

''ஹலோ...''

''மிஸ்டர் போஜராவ்?''

''எஸ்...''

''ஸார் நான்... பிரான்சிஸ். அரவேணு போலீஸ் ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டர்...''

''சொல்லுங்க...''

''இரண்டாவது 'ஹேர்பின் பெண்ட்' வளைவில் ஸ்கூட்டர் ஏதாவது இருக்கான்னு பார்க்கச் சொல்லியிருந்தீங்க. உடனே அந்த ஸ்பாட்டுக்குப் போனோம் ஸார்... ஸ்பாட்ல ஸ்கூட்டர் இருந்தது. ஆனா அந்த ஸ்கூட்டர் ரோட்டுக்குக் கீழே இருக்கிற பழத் தோட்ட உரிமையாளர் நஞ்சனுக்கு சொந்தமானது. அவர்கிட்டே விசாரணை நடத்தினப்போ... நீங்க குறிப்பிட்ட அந்த கர்ப்பிணிப் பொண்ணும், ஒரு ஆளும் பஸ்ஸுக்காக ஸ்கூட்டர் பக்கத்துல காத்திட்டிருந்ததா சொன்னார்.''

''அப்போ... அவரோட ஸ்கூட்டரைக் காட்டி... கார்ல வந்தவங்களை ஏமாத்தியிருக்காங்க...''

''அப்படித்தான் இருக்கணும் ஸார்...''

''உங்க தகவலுக்கு ரொம்ப நன்றி மிஸ்டர் பிரான்சிஸ்...'' - சொல்லி விட்டு ரிஸீவரை



வைத்தார் போஜராவ். மதுவை ஏறிட்டார்.

''நீங்க வீட்டுக்குப் போங்க... நான் டிரைவரோட போஸ்ட் மார்ட்டம் விவகாரங்களை முடிச்சுகிட்டு சாயந்தரமா உங்க வீட்டுக்கு வர்றேன்...''

நாகரத்தினம்மாள் கவலையோடு குறுக்கிட்டாள். ''இன்ஸ்பெக்டர்... அவங்க... என்... மகளை...''

''ஒண்ணும் பண்ண முடியாது. ரெண்டு கான்ஸ்டபிளை உங்க வீட்டுக்கு பாதுகாப்புக்காக அனுப்பறேன். அவங்களைப் பிடிக்கிற வரைக்கும் நீங்களும் கொஞ்சம் எச்சரிக்கையா இருங்க...''

எல்லோரும் எழுந்தார்கள். போஜராவ் ரசிகாவின் பக்கம் புன்னகையோடு திரும்பினார். ''உங்க துணிச்சலான உதவிக்கு போலீஸ் டிபார்ட்மெண்ட் நிறையவே கடமைப்பட்டிருக்கு... அவார்டுக்கு எழுதிப் போட்டுடறேன்...''

''வேண்டாம் ஸார். இந்த உதவிக்கு பப்ளிசிடி குடுக்க வேண்டாம்... இக்கட்டான நிலைமையில் யார் இருந்தாலும் காப்பாத்த முயற்சிக்கிறது இயல்புதானே?''

நாகரத்தினம்மாள் ரசிகாவின் தலையைக் கோதி விட்டாள். ''நீ சொல்றது தப்பும்மா... இந்த துணிச்சல் யார்க்கும் வந்துடாது. ரோட்ல ரெண்டு பேர்க்கு சண்டைன்னா... அதைப் பார்த்துட்டு ஒதுங்கிப் போறவங்கதான் அதிகம். ஆனா நீயும் உன்னோட அண்ணனும்... கையில எந்த ஆயுதமும் இல்லாமே... எங்க காரை ஃபாலோ பண்ணி வந்தது... ஒரு பெரிய காரியமில்லையா?''

ரசிகா புன்னகைத்தாள். ''இந்த நன்றியை எல்லாம் அண்ணனுக்குத்தான் சொல்லணும். அண்ணன்தான் மொதல்ல - கார்ல ஏதோ 'விபரீதம்'ங்கிறதைக் கண்டு பிடிச்சார். நான் நம்பலை... ஆனா அண்ணன் தீர்மானமா சொல்லவே காரை ஃபாலோ பண்ணினேன்...''

மது அவளை ஏறிட்டான்.

''மிஸ் ரசிகா! நீங்களும் உங்க ப்ரதரும் எங்க வீட்டுக்கு வந்துட்டு போகணும்...''

கிருஷ்ணமூர்த்தி குறுக்கிட்டான். ''ஸாரி, மிஸ்டர் மது! நாங்க ஒரு அவசர காரியமா

கோயமுத்தூர் புறப்பட்டு போயிட்டிருக்கோம்... போய்ட்டு அநேகமா ராத்திரி திரும்பிடுவோம். நாளைக்கு காலையில உங்க வீட்டுக்கு வர்றோமே!''

''கண்டிப்பா வரணும்...''

''வர்றோம்...''

ரசிகாவும் கிருஷ்ணமூர்த்தியும் விடை பெற்றுக் கொண்டு - ஸ்டேஷனுக்கு கொஞ்சம் தள்ளி நின்றிருந்த தங்களுடைய காரை நோக்கிப் போனார்கள்.

# 7

இன்ஸ்பெக்டர் போஜராஜ் மறுநாள் காலை பத்து மணி சுமாருக்கு மதுவைப் பார்க்க அவனுடைய பங்களாவுக்குப் போயிருந்த போது - அவன் முன்புற ஹாலில் உட்கார்ந்து எஸ்டேட் மானேஜரோடு பேசிக் கொண்டிருந்தான்.

இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் ஆர்வமாய் எழுந்தான்.

''வாங்க இன்ஸ்பெக்டர்...''

அவன் காட்டிய நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே இன்ஸ்பெக்டர் சொன்னார். ''மிஸ்டர் மது! உங்களை நேற்றைக்கு கொலை பண்ண முயற்சி செஞ்சவங்க பொன்ராஜோட ப்ரதரும், சிஸ்டரும்ன்னு சொன்னீங்க... இல்லையா?''

''ஆமா...''

''பொன்ராஜ்க்கு ப்ரதர்ஸோ சிஸ்டர்ஸோ கிடையாதுன்னு எங்களுக்குத் தகவல் கிடைச்சிருக்கு.''

''அப்படீன்னா... வந்தவங்க யார் ஸார்?''

''அதை நீங்கதான் சொல்லணும்...! 'ஐடியல் லாட்ஜ்' மூலமா பொன்ராஜோட அட்ரஸ் கிடைச்சதும்... மெட்ராஸுக்கு உடனடியா... ரப் - இன்ஸ்பெக்டர் கௌடாவை அனுப்பி வெச்சோம். அந்த அட்ரஸுக்கு கௌடா போன போது பொன்ராஜோட வயசான அம்மா மட்டும்தான் இருந்திருக்காங்க. கௌடா அந்தம்மாகிட்டே நடத்தின விசாரணையில்



பொன்ராஜ் ஒருத்தன்தான் அந்தம்மாவுக்கு மகன்ங்கிற உண்மை தெரிஞ்சிருக்கு. ஸோ... உங்களைத் தாக்க வந்தவங்க வேற யாரோ...''

மது யோசனையில் விழுந்து விட - போஜராஜ் கேட்டார்.

''அந்த ரெண்டு பேரையும் இதுக்கு முன்னாடி நீங்க பார்த்ததே இல்லையா மது?''

''இல்ல... ஸார்...''

''உங்க மதர்...?''

''அவங்களும் பார்த்ததில்லை...''

''குறிப்பா உங்களைத் தீர்த்துக் கட்டணும்ன்னுதான் வந்திருக்காங்க. தனிப்பட்ட முறையில் உங்களுக்கு விரோதிகள்ன்னு சொல்ற மாதிரி யாராவது இருக்காங்களா?''

''அப்படி யாரும் கிடையாது... ஸார்...''

''அவசரப்படாமே யோசிச்சுப் பாருங்க...''

''ஸார்! நான் யார்க்குமே விரோதி கிடையாது. பொன்ராஜ் கூட எனக்கு விரோதியில்லை. எஸ்டேட்ல வேலை செய்யற பொண்ணுகிட்டே அவன் தப்பா நடந்துக்கப் பார்த்தான். அதை நான் கண்டிக்கப் போய்தான்... அவனைத் தாக்கினேன்...''

''பொன்ராஜ்க்கு நெருங்கின சிநேகிதம் யார்ன்னு தெரியுமா?''

''தெரியாது ஸார்...''

''பொன்ராஜ் உங்க எஸ்டேட்ல வேலை பார்த்தப்போ... அதே பீரியடில் கங்காணியா வேலை பார்த்த வேற யாராவது இன்னமும் உங்ககிட்டே வேலை பார்க்கிறாங்களா?''

பக்கத்தில் நின்றிருந்த எஸ்டேட் மானேஜர் குறுக்கிட்டு சொன்னார். ''ராஜுன்னு ஒருத்தன் இருக்கான் ஸார். பொன்ராஜ் உயிரோடு இருந்த காலத்துல ரெண்டு பேரும் சாராயக் கடைக்கு ஒண்ணா போவாங்க...''

''அந்த ராஜுவை நான் விசாரிக்கணும்...''

''ஃபீல்டுல இருக்கான் ஸார்... அவனை இங்கே அனுப்பவா? இல்ல... நீங்க ஃபீல்டுக்கு வர்றீங்களா ஸார்...''

''நானே வர்றேன். இமீர்ன்னு போய்

விசாரிச்சாத்தான் உண்மைகள் வரும். நீங்க போய் விவரத்தை சொல்லி கூட்டிட்டு வர்றதுக்குள்ளே... அவன் பேச வேண்டிய பொய்களை பட்டியல் போட்டு வெச்சுக்குவான்...''

எஸ்டேட் மானேஜரும், இன்ஸ்பெக்டரும் மதுவிடம் விடை பெற்றுக் கொண்டு ஜீப்புக்கு வந்தார்கள். புறப்பட்டார்கள். அவர்கள் புறப்பட்டுப் போன சில நிமிஷ நேரத்திற்கு பிறகு - அந்த பியட் கார் உள்ளே நுழைந்து நின்றது.

கிருஷ்ணமூர்த்தியும் ரசிகாவும் இறங்கினார்கள். மது உள்ளிருந்து ஓடி வந்தான். ''வாங்க... வாங்க...''

''என்ன... அந்த ரெண்டு பேரையும் அமுக்கியாச்சா?''

''போலீஸ் முயற்சி பண்ணிட்டிருக்காங்க! உட்காருங்க...''

ரசிகாவும் கிருஷ்ணமூர்த்தியும் சோபாவில் உட்கார்ந்தார்கள். ரசிகா கேட்டாள். ''அம்மா... எங்கே?''

''நேத்திக்கு நடந்த சம்பவத்துல... அம்மாவுக்கு ப்ளட் பிரஷர் அதிகமாயிடுச்சு... மாடி ரூம்ல படுத்திட்டிருக்காங்க...''

ரசிகா கேட்டாள். ''நான் போய் பார்க்கலாமா?''

''ம்... பார்த்துட்டு வாங்களேன்... மாடியில் ரெண்டாவது ரூம்...''

''தாங்க் யூ...''

ரசிகா எழுந்து போனாள்.

கிருஷ்ணமூர்த்தி மதுவை ஏறிட்டான். ''ரசிகா யார்கிட்டேயும் ரொம்ப சீக்கிரமா... ஒட்டிக்கிடுவா... ஜோவியல் டைப்...''

''அப்படித்தான் இருக்கணும். நீங்க நேத்தைக்கு கோயமுத்தூர் போய்ட்டு வந்துட்டீங்களா?''

''நைட்டே திரும்பிட்டோம்...''

''என்னால உங்களுக்கு வேலை கெட்டது...''

''நோ... நோ... அப்படியெல்லாம் ஒன்றுமில்லை...'' - கிருஷ்ணமூர்த்தி தன்னடக்கத்தோடு மறுத்துக் கொண்டிருக்கும் போதே -

சோபாவின் மேலிருந்த டெலிபோன் கூப்பிட்டது.



மது ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ...''

''மது வீடு தானே?''

''ஆமா...''

''அங்கே... கிருஷ்ணமூர்த்தி இருக்காரா?''

''இருக்கார்... நீங்க யார் பேசறது?''

''அவரோட ஃப்ரண்ட்! அவரைக் கொஞ்சம் பேசச் சொல்றீங்களா?''

''ஒன் மினிட்...'' என்று சொன்ன மது எதிரில் உட்கார்ந்திருந்த கிருஷ்ணமூர்த்தியிடம் ரிஸீவரை நீட்டிக் கொண்டே மெல்லிய குரலில் - ''யாரோ உங்க ஃப்பிரண்டாம். லைன்ல இருக்கார்...'' என்றான்.

கிருஷ்ணமூர்த்தி ரிஸீவரை வாங்கி - ''எஸ்... யாரு?'' என்றான். மறுமுனையில் குரல் உறுமியது.

''அந்த கொலைகாரப் பய மதுவை நீ ஒரு வாட்டி காப்பாத்தலாம். அடுத்த வாட்டி அவனை நீ காப்பாத்தவே முடியாது. நீயும் உன்னோட தங்கச்சியும் ரசிகாவும் அவனைக் காப்பாத்தின குற்றத்துக்காக கூடிய சீக்கிரமே ஒரு தண்டனையை அடையப் போறீங்க...''

''டேய்... யார்ரா... நீ?''

''ரெண்டு தண்டனைகளை யோசனை பண்ணி வெச்சிருக்கேன்.

ஒண்ணு - உன்னோட வலது கையை வெட்டிடறது... ரெண்டாவது - கிளி மாதிரி இருக்கிற உன்னோட தங்கச்சிக்கு 'கன்னி' கழிக்கிற வைபவத்தை நடத்தறது. ரெண்டுல எதை நிறைவேத்தலாம்ன்னு நீயே... சொல்லு...''

''யூ... யூ... யூ... ராஸ்கல்...''

மது தவிப்பாய் கேட்டான். ''போன்ல யாரு?''

''யாரோ தெரியலை... மிரட்றான்...''

''மிரட்றானா...?'' - மது ரிஸீவரை வாங்கி குரல் கொடுத்தான்.

''யார் பேசறது?''

குரல் பலமாய் சிரித்தது. ''ஓ... மதுவா! பொன்ராஜ் உயிரோடு இல்லாத இந்த உலகத்துல நீயும் உயிரோடு இருக்கக் கூடாது. உன்னைக் காப்பாத்தினவங்களுக்கும்... இனிமே

காப்பாத்தப் போறவங்களுக்கும்... எச்சரிக்கை பண்ணத்தான் இந்தப் போன். உன்னைக் காப்பாத்துன கிருஷ்ணமூர்த்திக்கும் அவன் தங்கைக்கும் தண்டனைகள் காத்திருக்கு. அந்த தண்டனைகள் கூடிய சீக்கிரமே நிறைவேற்றப்படும். அஞ்சு வருஷம் ஜெயில்ல இருந்துட்டு வந்திருக்கே. சோளக் களியும் கீரைக் குழம்பும் சாப்பிட்டு - சாப்பிட்டு உன்னோட நாக்கு மாத்து போயிருக்கும். ரெண்டு நாளைக்கு வாய்க்கு ருசியா... வீட்ல சாப்பிடு... அப்புறம் செத்துப் போலாம்...''

மது மேற்கொண்டு பேசும் முன் ரிஸீவர் வைக்கப்பட்டு விட்டது. மது ரிஸீவரை வைத்து விட்டு - குழப்பமாய் நெற்றியைத் தேய்த்துக் கொண்டான்.

''பொன்ராஜுக்கும் இவனுக்கும் என்ன தொடர்புன்னே புரியலையே?''

''அந்த ஆசாமி இதே ஊர்லதான் இருக்கான்னு தெரியுது...''

''மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி! நீங்களும் உங்க சிஸ்டரும் கொஞ்சம் ஜாக்ரதையாவே இருந்துக்குங்க... அகால நேரத்துல வெளியே வர்றதோ... போறதோ... வேண்டாம்!''

மது சொல்லிக் கொண்டிருக்கும் போதே -

காம்பௌண்ட் கேட்டுக்குள் - போலீஸ் ஜீப் நுழைவது தெரிந்தது. அடுத்த சில நிமிடங்களில் இன்ஸ்பெக்டரும், எஸ்டேட் மானேஜரும் உள்ளே வந்தார்கள்.

''ராஜுவை விசாரிச்சீங்களா இன்ஸ்பெக்டர்?''

''ம்... ஒரு உபயோகமான தகவல் கிடைச்சிருக்கு...''

''உபயோகமான தகவலா?''

''எஸ்! பொன்ராஜுக்கும் - மேட்டுப்பாளையம் பங்களா மேட்டில் குடியிருக்கிற சுலோசனாங்கற பொண்ணுக்கும் அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி காண்டாக்ட் இருந்திருக்கு. சின்ன வீடு செட்டப் மாதிரிதானாம் அது. பொன்ராஜ் உயிரோடு இருந்தவரைக்கும் நகை நட்டுன்னு அவ செழிப்பா இருந்திருக்கா... பொன்ராஜ் இறந்ததுக்குப்



பின்னாடி... அவளோட வாழ்க்கை வசதிகள் கெட்டுப் போனதினாலே... அவளுக்கு உங்க மேல விரோத உணர்ச்சி ஏற்பட்டிருக்கலாம்ங்கிறது ராஜுவோட ஸ்டேட்மெண்ட். அந்த சுலோசனாவுக்கு - ஒரு அண்ணனும் இருக்கானாம்...''

கிருஷ்ணமூர்த்தி குறுக்கிட்டான்.

''ஸார்! நீங்க இங்கே வர்றதுக்கு ரெண்டு நிமிஷத்துக்கு முந்தி - ஒரு போன்கால் வந்தது. போன்ல என்னையும் மிஸ்டர் மதுவையும் ஒருத்தன் மிரட்டினான்...''

''லோக்கல் போனா?''

''ஆமா...''

''லைனை ட்ரேஸ் பண்ணியிருக்கலாமே?''

''அந்த நேரத்துல எதுவும் தோணலை ஸார்...''

போஜராஜ் மதுவிடம் திரும்பினார். ''போன்ல பேசினவனோட குரல் எப்படியிருந்தது?''

''நேத்திக்கு கார்ல ஏறின ஆசாமியோட குரல் மாதிரியே இருந்தது...''

''அப்படீன்னா... ஆசாமி கோத்தகிரியில்தான் இருக்கான்...'' - சொன்ன இன்ஸ்பெக்டர் - டீபாயின் மேலிருந்த டெலிபோனை நோக்கிப் போனார்.

---

# 8

---

மறுநாள் காலை. ஆறு மணி. கோத்தகிரி - பனியில் வசமாய் சிக்கிக் கொண்டு - சூரியனின் வெளிச்சத்தை வாங்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்க - தன்னுடைய அறையினின்றும் ஜாக்கிங் சூட்டில் வெளிப்பட்டாள் ரசிகா.

உடம்புக்கு கம்பளியைச் சுற்றிக் கொண்டு - நேற்றைய ஹிண்டு பேப்பரின் மிச்சம் மீதி செய்திகளைப் படித்துக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி நிமிர்ந்தான்.

''ஏய்... ரசி... எங்கே புறப்பட்டுட்டே?''

''பார்த்தா தெரியலை...? ஜாக்கிங்...''

''கொஞ்ச நாளைக்கு... இந்த ஜாக்கிங்கெல்லாம்

வேண்டாம்...''

''அந்த மிரட்டல் பேர்வழிக்காக பயப்படறியா?''

''பயப்படலை... ஒரு எச்சரிக்கைக்குத்தான்...''

''எனக்கு இந்த எச்சரிக்கையெல்லாம் வேண்டாம்... எவனும் என்னை ஒண்ணும் பண்ண முடியாது... கராத்தேயும் ஜுடோவும் எதுக்கு கத்து வெச்சிருக்கேன்? நீ தைரியமா உட்கார்ந்து பேப்பர் படி. நான் டன்ஹில் எஸ்டேட் வரைக்கும்... ஓடிட்டு வந்துடறேன்...''

''டன்ஹில் எஸ்டேட் வரைக்குமா? திரும்பி வர ஒரு மணி நேரமாயிடுமே?''

''ஆனா என்ன? வரட்டுமா!'' - சொல்லிக் கொண்டே வாசலை நோக்கி பனியில் ஓடினாள் ரசிகா.

''பயங்கரத் துணிச்சல்!'' - வாய்க்குள் முனகிக் கொண்டவன் பேப்பரின் ஸ்போர்ட்ஸ் காலத்தை பிரித்து வைத்துக் கொண்டு - கிரிக்கெட் தோல்விக்கு - வெங்சர்க்கார் சொன்ன நொண்டிச் சமாதானங்களைப் படிக்க ஆரம்பித்தான்.

இரண்டு பத்தி படித்திருப்பான்.

வாசலில் மோட்டார் பைக் சத்தம் கேட்டது.

நிமிர்ந்தவன் - அதிர்ச்சியாய் எழுந்தான்.

''மாதவ்! ராஷ்மி!'' - உதடுகள் நடுக்கமாய் உச்சரித்தது-

பைக்கினின்றும் - அந்த இளைஞன் - இளைஞி - ஸ்டோன் வாஷ் சர்ட்களில் கனமான பேண்ட்டுகளில் - இறங்கினார்கள். அலட்சிய நடை போட்டுக் கொண்டு உள்ளே வந்தார்கள்.

''குட் மார்னிங் கிருஷ்ணமூர்த்தி!''

கிருஷ்ணமூர்த்தி படபடக் குரலில் சொன்னான். ''மா... மாதவ்! ரா... ராஷ்மி! இங்கே... எதுக்காக... வ... வந்தீங்க...?''

''ஏ... ஏன்... வரக்கூடாதா?'' - அந்த இளைஞன் சிரிக்க - பெண் பக்கத்தில் வந்தாள். ''கிருஷ்ணமூர்த்தி! பயப்படாதே... உன்னோட... சிஸ்டர்... ஜாக்கிங் போறதைப் பார்த்துட்டுத் தான் வந்தோம்! உட்காரலாமா?''

''ம்... ம்...'' - கிருஷ்ணமூர்த்தி தலையாட்ட -



மாதவ்வும் ராஷ்மியும் உட்கார்ந்தார்கள். மாதவ் தன் தலையில் கவிழ்ந்திருந்த பனிக்குல்லாவை எடுத்துக் கொண்டே கேட்டான்.

''போலீஸ் நிலவரமெல்லாம் எப்படியிருக்கு?''

''பொ... பொன்ராஜ் சைடில் இன்வெஸ்டிகேஷன் நடந்துட்டிருக்கு...''

ராஷ்மி சிரித்தாள். ''கிருஷ்ணமூர்த்தி... உனக்கு ஏன் குரல் நடுங்குது?''

''உங்க ரெண்டு பேரையும் இவ்வளவு காலை நேரத்துல நான் எதிர்பார்க்கலை... அதுவும் என் வீட்ல...''

''ஸாரி! வரக்கூடாதுன்னு தான் நினைச்சோம். பட்... வரவேண்டிய சூழ்நிலை...''

''என்ன...?''

''எங்களுக்குக் கொஞ்சம் பணம் வேணும்...''

''பணமா?''

''ம்...''

''எவ்வளவு...?''

''ஒரு பத்தாயிரம்...''

''நம்ம அக்ரிமெண்ட்ல நடுவே பணம் கேக்கக்கூடாதுன்னு ஒரு விதி இருக்கு தெரியுமா மாதவ்?''

''தெரியும்... ஆனா... அந்த விதியை தளர்த்தியாக வேண்டிய நிலைமை. நானும் ராஷ்மியும் இந்த கோத்தகிரியில் இருந்துட்டிருக்கிறது சரியில்லை... வெளியூர் போய்ட்டு ரெண்டு வாரம் கழிச்சு வரலாம்னு இருக்கோம்...''

கிருஷ்ணமூர்த்தி அவர்களையே பார்த்தான்.

''என்ன பார்க்கிறே?''

''நான் போட்டுக் கொடுத்த திட்டம் வேறே! நீயும் உன் தங்கச்சியும் நடைமுறை படுத்திய திட்டம் வேறே!''

''எல்லாமே சரியாத்தான் பண்ணினோம்... அந்த டிரைவர் வேலுவை கட்டுக் கொன்னது மாத்திரம் எக்ஸ்ட்ரா. அதை நானே எதிர்பார்க்கலை. அவனை மட்டும் கடாமே இருந்திருந்தா காரியம் கெட்டிருக்கும்...''

''கொலை நடந்ததினாலே... நிலைமை

இப்போசீரியஸாயிடுச்சு... மாதவ்! நான் போட்டுக் கொடுத்த திட்டத்துல இந்த கொலை கிடையாது...''

''நீ போட்டுக் கொடுத்த திட்டத்துல கொலை கிடையாது தான். ஒத்துக்கறேன். ஆனா அந்த வேலுவை சுடாமே இருந்திருந்தா... மது சுதாரிச்சு எங்களைத் தாக்கியிருப்பான். நாங்களும் மாட்டியிருப்போம்...''

ராஷ்மி குறுக்கிட்டாள். ''இதோ பார் மாதவ்! நடந்து போனதை பேசிட்டிருக்க நாம இங்கே வரலை... நமக்கு வேண்டியது பணம்... வாங்கிட்டு போயிட்டே இருக்கலாம்...''

''பணம் இப்ப என்கிட்ட இல்லை...''

''இப்ப வேண்டாம். பத்து மணிக்கு பாங்க் திறந்ததும் எடுத்துக் கொடு போதும்...''

''மாதவ்! என்னோட நிலைமை... உனக்கு நல்லாத் தெரியும். என்னோட ஃபாக்டரி நஷ்டத்துல ஓடறதும்... அதனால...''

ராஷ்மி கையமர்த்தினாள். ''இந்த பஞ்சப் பாட்டெல்லாம் பாடாதே கிருஷ்ணமூர்த்தி. எங்களுக்குப் பத்தாயிரம் ரூபா இப்ப வேணும்... நாம ஏற்கனவே பேசிகிட்ட தொகையில கழிச்சிக்கலாம்... நாங்க இந்த ஊர்ல இருந்தா... எங்களுக்கும் நிம்மதியிருக்காது. உனக்கும் நிம்மதியிருக்காது.''

கிருஷ்ணமூர்த்தி சில விநாடிகள் யோசித்து விட்டு - நெற்றியைத் தேய்த்துக் கொண்டே நிமிர்ந்தான்.

''நாளைக்கு சாயந்தரம் பணம் தர்றேன்...''

''ஏன்... இன்னிக்கு முடியாதா?''

''முடியாது... நாளைக்கு கலெக்‌ஷன் டே... கையில கொஞ்சம் பணம் இருக்கும்...''

''கண்டிப்பா தருவியா?''

''தர்றேன்...''

''நாளைக்கு வந்து எதிர்ல நின்னதும் முடியலைன்னு சொல்ல மாட்டியே?''

''மாட்டேன்...''

ராஷ்மியும் மாதவ்வும் எழுந்தார்கள். ''நாங்க புறப்படறோம். ஞாபகம் வெச்சுக்கோ. பத்தாயிரம்



ரூபாய். நாளைக்கு சாயந்தரம் ஆறு மணிக்கு இங்கேயே வந்துடறோம்...''

''இங்கே வேண்டாம்...''

''பின்னே...?''

''லேக்குக்கு பக்கத்துல வந்துடு...''

''ஏன்... இங்கேயே வந்துட்டா என்ன?''

''வேண்டாம்... ரசிகா இருப்பா...''

''ஆறு மணிக்கு அவதான் லேடீஸ் கிளப்புக்குப் போயிடுவாளே?''

''இனிமே வீட்ல எந்த டீலிங்ஸும் வேண்டாம்...''

''சரி... உன்னோட இஷ்டம். லேக்குக்கே வர்றோம்...'' - மாதவ் தன் கையிலிருந்த பனிக் குல்லாயை தலையில் பொருத்திக் கொண்டு - வாசலில் நின்றிருந்த மோட்டார் பைக்கை நோக்கிப் போக - ராஷ்மி, கிருஷ்ணமூர்த்தியின் தலையைத் தடவி விட்டு மாதவ்வை பின் தொடர்ந்தாள்.

பைக் கதறி புகை கக்கி புறப்பட்டுப் போனதும் - கிருஷ்ண மூர்த்தி வியர்த்த முகத்தோடு தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தான்.

சில விநாடிகள்தான்.

பின் பக்கம் அந்தக் குரல் கேட்டது.

''அண்ணா...''

தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு திரும்பினான் கிருஷ்ண மூர்த்தி. ரசிகா பின்பக்கக் கதவருகே - இறுகிய முகத்தோடு நின்றிருந்தாள்.

---

## 9

---

''ர... ர... ரசிகா...''

கிருஷ்ணமூர்த்தி தடுமாற்றமாய் எழுந்தான். அந்தக் குளிரான வேளையிலும் வியர்த்துப் போயிருந்த முகத்தை இரண்டு கைகளாலும் வழித்து விட்டுக் கொண்டான். ரசிகா மார்புக்கு குறுக்கே கைகளைக் கட்டிக் கொண்டு அவனை நெருங்கினாள். அவன் குழறலாய் கேட்டான்.

''ர... ரசி...! நீ... எ... எப்படி?''

''உள்ளே வந்தேன்னு கேக்கறியாண்ணா? ரொம்ப சுலபம். நம்ம வீட்டுப் பின் பக்க காம்பௌண்ட் கேட்டும், சுவரும் அவ்வளவு உயரமில்லையே? ரொம்ப... ஈஸியா... 'ஜம்ப்' பண்ணி வந்தேன்...''

''ர... ரசி... உ... உனக்கு?''

''இது எப்படி தெரியும்ன்னு கேக்கறியா? அதையும் சொல்லிடறேன் எனக்கு முதல் முதலா சந்தேகம் வந்தது நேத்திக்கு ராத்திரிதான். எட்டு மணிக்கு ஒரு தடவை டெலிபோன் மணி அடிச்சப்ப... நான் ரிஸீவரை எடுத்தேன். 'ஹலோ'ன்னு குரல் கொடுத்ததும் - ரிஸீவரை வெச்சுட்டாங்க. பதினஞ்சு நிமிஷம் கழிச்சு மறுபடியும் போன் வந்தது. ரிஸீவரை எடுத்து 'ஹலோ'ன்னு சொன்னதும் மறுபக்கத்துல வெச்சுட்டாங்க. ரிஸீவரை வெக்கும்போது - ஒரு பொண்ணோட குரல் கிசுகிசுப்பா... 'நாளைக்குக் காத்தால... பார்த்துக்கலாம்'ன்னு சொன்ன மாதிரி என் காதுல விழுந்தது. எனக்கு உடனே சந்தேகம் வந்தது. இந்த வீட்ல இருக்கிறது நீயும் நானும் மட்டுந்தான். வந்த போன் நிச்சயமா எனக்கில்லை. ஸோ... இது உன்னோட சம்பந்தப்பட்ட விவகாரம்ன்னு நினைச்சேன். காலையில வரப்போறவங்க யார்ங்கிறதை தெரிஞ்சுக்க விரும்பி - ஜாக்கிங் போற மாதிரி பாவ்லா காட்டி - கொஞ்ச தூரம் ஓடி - நம்ம வீட்டுக்கு பின் பக்கமா வந்து - இந்த ரூமுக்குள்ளே ஒளிஞ்சுகிட்டேன். அட்சரசுத்தமா... நீயும்... அவங்களும் பேசினதை கேட்டுட்டேன். இருந்தாலும் எனக்கு சில சந்தேகங்கள்... கேக்கலாமாண்ணா?''

கிருஷ்ணமூர்த்தி தளர்ந்து போய் - மறுபடியும் உட்கார்ந்தான். ரசிகா மெல்ல நடந்து போய் அவன் தோள்மேல் கையை வைத்தாள்.

''யார் அவங்க...?''

''......''

''சொல்லுண்ணா... உன்னோட நிலைமை இக்கட்டானதுன்னு எனக்குப் புரியுது. அந்த இக்கட்டான நிலைமையை நானும் பகிர்ந்துக்கிறேன். யார் அவங்க?''



''மா... மாதவ்... ராஷ்மி...''

''உனக்கு எப்படி இவங்க பழக்கம்...?''

''மாதவ்... என்னோட காலேஜ் மேட்... ஆனா... படிப்பை பாதியிலேயே டிஸ்கன்டினியூ பண்ணிட்டு - சட்ட விரோதமான காரியங்களுக்குப் போயிட்டான். ராஷ்மி அவனோட காதலி. பக்கத்தில் இருக்கிற 'குஞ்சப்பனை' ஊர்தான் அவளுக்கு சொந்த ஊர்...''

''மதுவோட கார்ல ஏறினது இவங்கதானே?''

''ஆமா...''

''நாம பார்த்தப்ப ரெண்டு பேரும் வேற மாதிரி இருந்தாங்க...''

''நிஜ அடையாளம் தெரியாதபடிக்கு ரெண்டு பேரும் முகங்களை மாத்திட்டு வந்தாங்க...''

''இப்ப வந்தது நிஜ உருவம்தானே?''

''ஆமா...''

''என்ன திட்டம் போட்டீங்க?''

''வ... வ... வந்து... வந்து...''

''சொல்லுண்ணா! மடமடன்னு எல்லாத்தையும் சொல்லி முடி... என்கிட்ட எதையும் மறைக்க வேண்டாம்...''

''ரசி!''

கிருஷ்ணமூர்த்தி அவளுடைய கைகளைப் பற்றிக் கொண்டு தழுதழுத்த குரலில் ஆரம்பித்தான். ''இந்த திட்டத்துக்கு வித்து போட்டதே மாதவ்தான். மூணு மாசத்துக்கு முன்னாடி நான் ஊட்டி போயிருந்தபோது - மாதவ்வை போட் கிளப்ல சந்திச்சேன். ரெண்டு பேரும் 'ட்ரிங்க்' சாப்பிட ஒரு 'பார்'க்கு போனோம். குடிச்சுகிட்டே ஒரு மணி நேரம் பேசிட்டிருந்தோம். அப்போ... நம்ம ம ஃபாக்டரி 'லாஸ்'ல நடக்கிறதைப் பத்தியும் பாங்க்லேயும், வெளியேயும் நிறைய கடன் இருக்கிறதைப் பத்தியும் அவன்கிட்டே சொன்னேன். 'இதே நிலைமையில் ஃபாக்டரி 'ரன்' ஆனா... சீக்கிரமே இன்சால்வென்ஸி குடுத்துட்டு - தலையில துண்டை போட்டுகிட்டு - கோயமுத்தூர் பஸ் ஸ்டாண்ட்டுக்கு பிச்சை எடுக்கப் போயிட வேண்டியதுதான்'னு சொன்னான் மாதவ். எனக்கு

அந்த வார்த்தை 'சுருக்'ன்னு மனசுல பட்டது. 'இந்த நஷ்டத்திலிருந்து மீள வழி இருக்கா?'ன்னு அவன்கிட்டே கேட்டேன். அவன் 'இருக்கு'ன்னு சொன்னான். நான் 'என்னா?'ன்னு கேட்டேன். 'உன்னோட அழகான தங்கச்சி ரசிகாவை - ஒரு பணக்கார வீட்டுப் பையனுக்குக் கட்டிக் குடுத்துடு. அவன் அந்த வீட்டுக்கு ஒரே பையனா இருக்கணும். பையனுக்கு அப்பா இருக்க கூடாது. அம்மா மட்டும் இருக்கணும். அப்படி ஒரு மாப்பிள்ளை உன் தங்கச்சிக்கு கிடைச்சா... உன்னோட பொருளாதார நிலைமையை உயர்த்திக்க முடியும்'ன்னு சொன்னான்.''

''ம்... அப்புறம்...''

'''அந்த மாதிரி ஒரு மாப்பிள்ளையை எங்கே போய்த் தேடறது?'ன்னு கேட்டேன். அதுக்கு மாதவ் 'உங்க ஊரிலேயே இருக்கான். அவனுக்கு எக்கச்சக்கமான சொத்து. அப்பா இல்லை; அம்மா மட்டும்தான். அம்மாவும் ஹார்ட் பேஷண்ட். அவன் இப்போ ஜெயில்ல இருக்கான். இன்னும் மூணு மாசத்துல விடுதலையாகி வர்றான். ஜெயிலுக்கு போய்ட்டு வந்த அவனுக்கு யாருமே பொண்ணைக் குடுக்கத் தயங்குவாங்க. இந்த சந்தர்ப்பத்தை நீ பயன்படுத்திகிட்டா... அந்தப் பையனை மாப்பிள்ளையாக்கிக்கலாம்'...ன்னு சொன்னான்.''

''சரி...''

''அதுக்கு... நான், 'வலிய போய்ப் பொண்ணைக் குடுக்க முடியுமா?'ன்னு கேட்டேன். 'அவனே வந்து பொண்ணைக் கேக்கும் படியா பண்ணலாம்'ன்னு சொல்லி - ஒரு திட்டத்தை சொன்னான் மாதவ். அதாவது... மதுவை ஒரு ஆபத்திலிருந்து நானோ... நீயோ... காப்பாத்தற மாதிரி நடிச்சு... அவனோட நல்ல அபிப்பிராயத்தை பெற வேண்டியது; அவனோட உயிரைக் காப்பாத்தினதாலே மதுவோட அம்மாவுக்கும் ரசிகா மேல ஒரு பிடிப்பு வரலாம். அந்த பிடிப்பே அம்மாக்காரிக்குப் பிரியமாகவும் - பையனுக்குக் காதலாகவும் மாறலாம். கல்யாணத்துல முடியலாம்'ன்னு



சொன்னான்.''

கிருஷ்ணமூர்த்தி சொல்லச் சொல்ல - ரசிகா பிரமித்துப் போய் அவனையே பார்த்தாள்.

''ம்... அப்புறம்?''

''நான் திட்டம் போட்டுக் குடுத்தேன். மது ஜெயிலிலிருந்து விடுதலையாகி - கார்ல கோத்தகிரி வரும்போது - பொன்ராஜ்க்கு வேண்டிய ஆட்கள் - அவனைக் கொலை செய்ய முயற்சிக்கிற மாதிரியும் - அந்த சமயத்துல - நானும் நீயும் அவனைக் காப்பாத்தற மாதிரியும் நடிக்க வேண்டியது. இந்தத் திட்டத்தைக் கடந்த ஒரு மாசமா... திங்க் பண்ணி தப்பு எந்த இடத்திலும் வரக் கூடாத அளவுக்கு துல்லியமா போட்டிருந்தோம். திட்டம் வெற்றியடைந்த - உனக்கும் மதுவுக்கும் கல்யாணம் நடந்தா... ரெண்டு லட்ச ரூபாயை மாதவ்க்கு நான் தர வேண்டியது. திட்டத்தோட முக்கியமான விதி இந்த திட்டத்துல யாரோட உயிர்க்கும் ஆபத்து ஏற்பட்டுடக் கூடாது. மிரட்டல் மூலமாவே காரியத்தை சாதிச்சுக்கணும்...''

''ம்... சொல்லு...''

''ஆனா மாதவ் அந்த விதியை மீறி டிரைவர் வேலுவை சுட்டுட்டான். விவகாரம்... இப்போ சீரியஸாயிடுச்சு. மதுவோட குடும்பத்துக்கும் நமக்கும் ஒரு நல்ல உறவு ஏற்பட்டது ஒண்ணுதான்... இந்த திட்டத்துல ஆறுதலான விஷயம்...''

''அண்ணா! இது ஆறுதலான விஷயமில்லை. ஆபத்தான விஷயம். அந்த மாதவ்வை நம்பி... இவ்வளவு மலிவான திட்டத்துல இறங்கலாமா? உன்னோட பணக்கஷ்டம் தீர்றதுக்காக என்னைப் பகடைக் காயா பயன்படுத்தலாமா?''

''அந்தப் பாவி என்னை ப்ரெயின் வாஷ் பண்ணிட்டான்... ரசி... போன வாரம் கூட ஒரு நாள் அவன் வீட்டுக்குப் போய் - இந்த திட்டம் வேண்டாம்ன்னு எவ்வளவோ தூரம் சொல்லிப் பார்த்தும் அவன் கேட்கலை. 'திட்டத்தை சக்சஸ் ஃபுல்லா முடிச்சுக் குடுக்க நானாச்சு. நீ ஏன் கவலைப்படறே'ன்னு ஒரு மணி நேரம் அவனும் ராஷ்மியும் பேசி... பேசி... என்னை இந்தத் திட்டத்துக்கு தலையாட்ட வெச்சுட்டாங்க...''

ரசி பெருமூச்சு விட்டாள். ''இனிமே நீ என்ன காரணத்தைச் சொன்னாலும்... மாதவ் - ராஷ்மி செஞ்ச கொலைக்கு நீயும்தான் உடந்தைங்கிற உண்மை மறையப் போறதில்லை. மாதவ்வும் ராஷ்மியும் போலீஸ் கைக்கு சிக்கினா - நிச்சயமா உன்னைக் கை காட்டிடுவாங்க...''

''ரசி! அந்த ஆபத்திலிருந்து தப்பிக்க உனக்கு ஏதாவது வழி தோணுதா?''

''இனிமேத்தான் யோசிக்கணும். அதுக்கு முன்னாடி இன்னும் சில கேள்விகள்...''

''என்ன?''

''நேத்திக்கு காலையில மது வீட்டுக்கு நீயும் நானும் போயிருந்தப்ப வெளியிலிருந்து - உன்னைக் கேட்டு போன் பண்ணினது யாரு?''

''மாதவ் தான்...''

''எதுக்காக அந்த வீண் மிரட்டல்?''

''மதுவோட உயிரைக் காப்பாத்தினதாலே... உனக்கும் எனக்கும் எவ்வளவு ஆபத்து இருக்குங்கிறதைக் காட்டி - இன்னும் நம்ம மேல பாசமும் பிரியமும் வர்றதுக்காகத்தான். அதுவுமில்லாமே மது நம்ம மேல சந்தேகப்படக்கூடாதுங்கிறதுக்காக - நான்தான் அவனை அப்படி போன் பண்ணச் சொன்னேன்...''

''இப்போ ரெண்டு பேரும் பணத்துக்காக வந்துட்டு போறாங்க... இல்லையா?''

''ஆமா...''

''எவ்வளவு வேணுமாம்?''

''பத்தாயிரம்...''

''கொடுக்கப் போறியா?''

''எங்கிருந்து குடுக்கிறது?''

''பின்னே நாளைக்கு சாயந்தரம்... லேக் பக்கமா அவங்க ரெண்டு பேரையும் வரச் சொல்லியிருக்கே?''

''நாளைக்குப் போய் ஏதாவது சமாதானம் சொல்லிக்க வேண்டியதுதான்...''

''அண்ணா! நீ நினைக்கிற மாதிரி... சமாதானம் சொல்லி அவங்களை சமாளிக்க முடியாது...''

''எதனால அப்படிச் சொல்றே?''

''எம் மனசில பட்டதைச் சொல்லட்டுமா?''



''என்ன?''

''அவங்க ரெண்டு பேரும் வேலுவை வேணுமின்னேதான் காட்டிக் கொன்னிருக்காங்க...''

''என்னது... வேணுமின்னேவா?''

''ஆமா... எம் மனசுக்கு அப்படித்தான் தோணுது... உன்கிட்டேயிருந்து பணம் பறிக்கறதுக்காகவே... அந்தக் கொலையைப் பண்ணியிருக்காங்க. கொலையைக் காட்டி பிளாக் மெயில் பண்றதுதான் அவங்க திட்டம். நீ அவங்களைக் காட்டிக் கொடுத்தா... நீயும் குற்றவாளிக் கூண்டுல ஏற வேண்டிய கட்டாயம்...''

ரசிகா சொல்ல - கிருஷ்ணமூர்த்தியின் உடம்பிலிருந்த - எல்லா வியர்வை நாளங்களும் - மும்முரமாய் இயங்க - கொத்தகிரியின் அந்தக் குளிரான காலையிலும் - வியர்வையில் சொத சொதத்தான்.

பக்கத்து அறையில் டெலிபோன் கூப்பிட்டது.

ரசிகா அண்ணனைக் கையமர்த்தி விட்டு தான் போய் ரிஸீவரை எடுத்தாள்.

''ஹலோ...''

''மிஸ் ரசிகாவா?''

''நான்தான்...''

''நான் மது பேசறேன்...''

''ஓ! நீங்களா...! குட் மார்னிங்...''

''குட் மார்னிங்! உங்க குரலைக் கேட்டதும்தான் எனக்கு சந்தோஷமா இருக்கு... ராத்திரி பூராவும் தான் சரியா தூங்கலை...''

''ஏன்?''

''உங்களுக்கு ஏதாவது ஆபத்து வந்திருக்குமோன்னு தான்...''

''கவலைப் படாதீங்க ஸார்... எங்களுக்கும் ஆபத்துக்கும் ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் வித்தியாசம்! என்னையும் அண்ணனையும் யாரும் நெருங்க முடியாது...''

''உங்க துணிச்சல் எனக்கு ஆச்சர்யமாயிருக்கு...''

''அம்மா எப்படி இருக்காங்க ஸார்?''

''பி.பி. குறைஞ்சு நார்மலுக்கு வந்துட்டாங்க. உங்களையும் உங்க அண்ணனையும் பார்க்க ஆசைப்படறாங்க. உங்களுக்கு எந்த நேரம் இங்கே

வர சௌகரியப்படும்...?"

"கண்டிப்பா வரணுமா?"

"அம்மா... ஆசைப்படறாங்க..."

"சரி... பத்து மணியிலிருந்து பதினோரு மணிக்குள்ளே வரட்டுமா?"

"வர்றது வர்றீங்க... லஞ்சுக்கு வந்துடுங்களேன்... ஒண்ணா உட்கார்ந்து சாப்பிடுவோம்..."

"ஓ... கே... வர்றோம்..."

---

## 10

---

டைனிங் டேபிளைச் சுற்றி - மது, நாகரத்தினம்மா, கிருஷ்ணமூர்த்தி, ரசிகா உட்கார்ந்திருந்தார்கள். வெஜிடபிள் பிரியாணியும், குருமாவும் ஒவ்வொருவரின் தட்டிலும் மணத்துக் கொண்டிருந்தது. மது வெங்காய தயிர் பச்சடி பாத்திரத்தை தன் பக்கமாய் நகர்த்திக் கொண்டே சொன்னான்.

"இன்ஸ்பெக்டர் போஜராவ் மேட்டுப் பாளையத்துக்கு போய்ட்டு வந்ததுமே எனக்கு போன் பண்ணி விஷயத்தைச் சொன்னார். மேட்டுப்பாளையம் பங்களாமேட்டில் பொன்ராஜ்க்கு சின்ன வீடா இருந்த சுலோச்சனா ரெண்டு வருஷத்துக்கு முந்தியே செத்துப் போயிட்டாளாம். அவளோட அண்ணன்காரன் ஒரு ஆக்ஸிடெண்ட்ல ரெண்டு காலையும் பறி கொடுத்துட்டு - ஊனமுற்றோர் டெலிபோன் பூத்துக்குள்ளே உட்கார்ந்திட்டிருக்கானாம்..."

நாகரத்தினம்மா குறுக்கிட்டாள்.

"மது! எம்மனசுக்குள்ளே ஒரு சந்தேகம்..."

"என்னம்மா?"

"ரெண்டு காலையும் இழந்துட்டு ஊனமுற்றோர் டெலிபோன் பூத்துக்குள்ளே உட்கார்ந்திட்டிருக்கிற சுலோச்சனாவோட அண்ணன் - வேற ஆட்களை வெச்சு ஏன் இந்தக் காரியத்தைப் பண்ணியிருக்கக் கூடாது?"

கிருஷ்ணமூர்த்தி தலையாட்டினான்.

"பண்ணியிருக்கலாம்..." -

ரசிகா அண்ணனை முறைத்தாள். முறைத்து



விட்டு மதுவிடம் திரும்பினாள். "ஸார் இது பொன்ராஜ் விவகாரமில்லை. அந்தப் போர்வையில் உங்களை யாரோ கொல்லப் பார்த்திருக்காங்க... பொன்ராஜ் செத்துப் போனதில் யார்க்கும் எந்த வருத்தமும் வர வாய்ப்பில்லை. ஏன்னா... அவன் ஒரு பொண்ணைக் கெடுக்கப் பார்த்திருக்கான்."

மது இரண்டு மாம்பழத் துண்டங்களை எடுத்து தன் தட்டில் போட்டுக் கொண்டே கவலையான குரலில் சொன்னான். "அஞ்சு வருஷம் ஜெயில்ல இருந்துட்டு திரும்பற எம்மேல... யார்க்கு என்ன கோபம் இருக்க முடியும்?"

நான்கு பேரும் லஞ்சை முடித்துக் கொண்டு - ஹால் சோபாக்களுக்கு வந்தபோது - வாட்ச்மேன் உள்ளே நுழைந்தான்.

"ஸார்..."

"என்ன திம்மா?"

"உங்களைப் பார்க்கிறதுக்காக குன்னூரிலிருந்து ஒரு பொண்ணும் அவ புருஷனும் ரெண்டு குழந்தைகளோடு வந்திருக்காங்க..."

"குன்னூரிலிருந்தா? பேரென்ன சொன்னாங்க?"

"பொண்ணு பேரு மாதவி. அந்த ஆள் பேர் திவாகரன்."

நாகரத்தினம்மா மலர்ந்தாள். "அடடே... நம்ம மாதவி. அனுப்பு. உள்ளே அனுப்பு..."

வாட்ச்மேன் நகர்ந்து போனதும் ரசிகாவிடம் திரும்பினாள்.

"இந்த மாதவிப் பொண்ணைத்தான் மது பொன்ராஜ்கிட்டேயிருந்து காப்பாத்தினான். மது ஜெயிலிலிருந்து வந்துட்டதை யாரோ அவகிட்டே சொல்லியிருக்கணும்... அதான் வந்துட்டா..."

சில விநாடிகளுக்குப் பின் -

மாதவியும் அவள் கணவன் திவாகரனும் இரண்டு குழந்தைகளோடு உள்ளே வந்தார்கள். திவாகரன் திடகாத்திரமாய் - நறுக்கு மீசையோடு - ஆறடி உயரத்திற்கு ஒரு போலீஸ் ஆபீஸர் மாதிரி தோற்றம் காட்டினான். மாதவி சிவப்பாய் - காலண்டர்களில் வரும் சிவகாசிப் பெண்ணைப் போல் - பளிச் சென்று இருந்தாள்.

''அய்யா!'' - கண்களில் நீர் தளும்பி - கைகளைக் குவித்துக் கொண்டே போய் - மதுவின் கால்களில் விழுந்தாள்.

''அடேடே... என்னம்மா... இது... எந்திரி... எந்திரி...''

அவள் கைகளைக் கூப்பிக் கொண்டே எழுந்தாள். ''அய்யா! இந்தப் பாவியோட மானத்தைக் காப்பாத்தறதுக்காக... நீங்க அஞ்சு வருஷம்... ஜெயில்...''

மது கையமர்த்தினான்.

''என்னோட தங்கச்சியை ஒருத்தன் கையைப் புடிச்சு இழுத்தா... நான் சும்மா விட்டுடுவேனா...? முடிஞ்சு போன கதையை எம்மா பேசிட்டிருக்கே?''

திவாகரன் மெல்ல நடந்து வந்து - மதுவின் இரண்டு கைகளையும் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டான். ''பயிரை வேலியே மேயற இந்தக் காலத்துல... நீங்க மட்டும்தான் வேலியாவே இருக்கீங்க ஸார்...''

''அது இருக்கட்டும்... சாப்பிட்டீங்களா?''

''சா... சாப்பிட்டோம்...''

''பொய் சொல்லாதீங்க. குழந்தைகளோட முகத்தைப் பார்த்தா சாப்பிட்ட மாதிரி தோணலை. மொதல்ல உள்ளே போய் சாப்டுட்டு வாங்க...'' - சொன்ன மது உள்ளே பார்த்து குரல் கொடுத்தான். ''குண்டன்...''

வேலையாள் ஒருவன் ஓடி வந்தான்.

''அய்யா...''

''இவங்களைக் கூட்டிகிட்டு போய் சாப்பிட வை...''

## 11

மறுநாள் சாயந்தரம் ஆறு மணி,

அடர்த்தியாய் பனி கொட்டிக் கொண்டிருந்த லேக் ஏரியாவில் பைக்கை நுழைத்தான் மாதவ். பில்லியனில் ராஷ்மி தொற்றியிருந்தாள். இரண்டு பேரும் கனமான ஸ்வெட்டர்களுக்குள் புகுந்திருந்தார்கள்.



''மாதவ்...''

''ம்...''

''கிருஷ்ணமூர்த்தி பணம் கொண்டு வந்திருப்பானா?''

''தொண்ணூறு பர்சென்ட் கொண்டு வந்திருப்பான்...''

''எனக்கென்னமோ நம்பிக்கையில்லை. பஞ்சப்பாட்டு பாடியே உன்னையும் என்னையும் தொரத்திடுவான்...'' - அணைத்துக் கொண்டே ராஷ்மி அவன் முதுகில் முகம் பதித்துக் கூப்பிட்டாள்.

''மாதவ்...''

''என்ன?''

''மதுவை ரசிகா காப்பாத்தினதாலே... ரெண்டு பேர்க்கும் மத்தியில் லவ் உருவாகி அது கல்யாணத்துல போய் - முடியும்னு நீ நம்பறியா?''

''நம்பறேன்... ரசிகாவோட அழகு மதுவை இழுக்கும். அவனோட புத்திசாலித்தனம் அந்த அம்மாவை ஈர்க்கும்...''

''ரசிகாவுக்கும், மதுவுக்கும் கல்யாணம் நடந்த பிறகு கிருஷ்ணமூர்த்தி உன்னையும் என்னையும் மறந்துட்டான்னா?''

''அவன் அப்படி மறந்துடக்கூடாதுங்கிறதுக்காகத்தான் ஸ்பெஷல் அயிட்டமா வேலுவைத் தீர்த்து கட்டியிருக்கோம்...''

''எனக்கென்னமோ இந்த கிருஷ்ணமூர்த்தி பணம் குடுப்பான்னு தோணலை... நாம பேசாமே பாம்பே போய் 'மெஹரா' கும்பலுக்கு உதவியா இருந்தா இந்நேரம் கை நிறைய பணம் பார்த்திருக்கலாம்...''

''ஒரு மூணு மாசம் பொறு. இங்கே நடக்கிற விவரங்களைப் பார்த்துட்டு... அப்புறமா பாம்பே போயிடலாம்...''

சொல்லிக் கொண்டே பைக்கைத் திருப்பிய போது -

பனிப் புகைக்கு நடுவே - கிருஷ்ணமூர்த்தியின் கார் நின்றிருப்பது தெரிந்தது.

''பய சீக்கிரமாவே... வந்துட்டான் போலிருக்கு...''

பைக்கின் வேகத்தைக் குறைத்து - கார் அருகே கொண்டு போய் நிறுத்தினான் மாதவ். கண்ணாடிக் கதவுகள் நான்கு பக்கமும் ஏற்றப்பட்டிருக்க - டிரைவிங் ஸ்தானத்தில் கிருஷ்ணமூர்த்தி உட்கார்ந்திருந்தான்.

பைக் கண்ணில் பட்டதும் கண்ணாடிக் கதவை இறக்கினான் கிருஷ்ணமூர்த்தி. ராஷ்மி கேட்டான்.

''வந்து ரொம்ப நேரமாச்சா?''

''பத்து நிமிஷமாச்சு...''

''பணம் கொண்டு வந்தியா?''

''.....''

''பணம் கொண்டு வந்தியான்னு கேட்டேன்...''

''இல்ல...''

''ஏன்...?''

''கலெக்ஷன் இன்னிக்கு டல்லு. பணம் கிடைக்கலை...''

''இதைச் சொல்றதுக்காகத்தான் இங்கே வந்து உட்கார்ந்திட்டிருக்கியா?'' மாதவ் கோபமாய் கேட்டுக் கொண்டிருக்கும் போதே - காரின் பின்பக்கக் கதவின் கண்ணாடி மெதுவாய் இறங்கியது. கதவின் சதுரத்தில் ரசிகாவின் முகம் தெரிந்தது.

''குட்... ஈவினிங் மாதவ்...''

''நீ... நீ... நீ...?''

''ரசிகா...''

''கி... கி... கிருஷ்ணமூர்த்தி...! உன்னோட சிஸ்டர்க்கு விஷயம் தெரியுமா?''

''தெரியும்...''

''எ... எப்படி...?''

ரசிகா குறுக்கிட்டாள். ''இதோ பார் மாதவ்! என்னோட அண்ணனை ப்ரெயின் வாஷ் பண்ணி - மலிவான ஒரு திட்டத்தைப் போட்டுக் கொடுத்து - அவரை வேணும்னே ஒரு இக்கட்டில் மாட்டிவிட்டிருக்கே... எனக்கு எல்லாமே தெரியும். எதைப் பேசறதாயிருந்தாலும் என்கிட்டே பேசு...''

''சரி! உன்கிட்டயே பேசறேன்... பணம் எங்கே?''

''எந்தப் பணம்?''

''நான் கேட்டிருந்த பத்தாயிரம்...''

''இப்ப எதுக்காக பணம் தரணும்? ஒப்பந்தப்படி



எனக்கும் மதுவுக்கும் கல்யாணம் முடிந்ததும் தானே பணம் தரணும்?''

''அது முழுத் தொகை ரெண்டு லட்சம். இப்போ அவசரத்துக்குப் பத்தாயிரம் வேணும். நாங்க இந்த ஊர்ல தங்கியிருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் - உன்னோட அண்ணனுக்கு ஆபத்து...''

''வெளியூர் போறதுக்குப் பணம் வேணும்... அவ்வளவு தானே?''

''ஆமா...''

''எந்த ஊர்க்குப் போகப் போறே?''

''மைசூர்... பெங்களூர்...''

''மைசூர், பெங்களூர்ல போய் தங்கறதுக்கு பத்தாயிரம் ரூபா எதுக்கு? ஒரு ரெண்டாயிரம் ரூபா தர்றேன். ஒரு சுமாரான லாட்ஜ் எடுத்து ஒரு வாரம் தங்கிட்டு வா. போதும்...''

''என்னது... ரெண்டாயிரமா?''

''என்னோட அண்ணன் நிலைமைக்கு இதுவே அதிகம்...''

மாதவ்வின் காதருகே ராஷ்மி கிசுகிசுத்தான். ''வாங்கிக்க மாதவ், பின்னாடி பார்த்துக்கலாம்...''

''சரி குடு...'' என்று கையை நீட்டினான்.

''இப்பவேவா?''

''பின்னே?''

''நாளை கழிச்சு மறுநாள்தான் பணம் கிடைக்கும்...''

''என்னது விளையாடறியா? ரெண்டாயிரம் ரூபா குடுக்கிறதுக்கு ரெண்டு நாள் வேணுமா உனக்கு? கிருஷ்ணமூர்த்தி... உன்னோட... சிஸ்டரை...''

''உஸ்!'' - கையமர்த்தினாள் ரசிகா. ''என்னோட அண்ணன்கிட்டே பேசறதாயிருந்தா... உனக்கு ஒரு பைசா கூடக் கிடைக்காது. என்கிட்டே பேச்சு வார்த்தை வெச்சுகிட்டா... அந்த ரெண்டாயிரம் கிடைக்கும்... இல்லேன்னா அதுவும் கிடைக்காது.''

ராஷ்மி வெடித்தான். ''நாங்க போலீஸுக்குத் தகவல் கொடுத்தா... உன் அண்ணனோட நிலைமை என்னாகும் தெரியுமா?''

''தெரியும். உங்களுக்கு என்ன நிலைமையோ...

அதுதான் என்னோட அண்ணனுக்கும்...''

''நாங்க போலீஸ்ல மாட்டிகிட்டாலும் தப்பிச்சுக்குவோம்...''

''நிஜமா...?''

''நிச்சயமா...!''

''அப்போ... போலீஸுக்குப் போய் தகவல் சொல்லிடுங்க. அண்ணா! நீ காரை நகர்த்து... நாம வீட்டுக்குப் போலாம்...''

கிருஷ்ணமூர்த்தி இக்னீசியனை உசுப்பினான்.

''நிறுத்து...'' - மாதவ் கத்தினான்.

இக்னீசியன் அணைந்தது.

''சரி... நீ சொன்ன மாதிரியே... நாளை கழிச்சு மறுநாள் பணம் குடு...''

''இப்ப சொன்னியே... இது வார்த்தை. ரெண்டாயிரத்தை இதே இடத்துக்கு வந்து வாங்கிக்கிங்க... போங்க...''

கார் நகர்ந்தது.

சிவப்பு விளக்குகளோடு - வேகம் எடுத்துப் போகும் அந்தக் காரை சிவப்பேறிய விழிகளோடு பார்த்தான் மாதவ்.

ராஷ்மி கரகரத்தாள்.

''மாதவ்! இது கொத்தற கிளி...''

''கிழிச்சிடுவோம்... கவலைப்படாதே!''

---

## 12

---

''மது...''

கூப்பிட்டுக் கொண்டே - நாகரத்தினம்மா மதுவின் அறைக்குள் நுழைந்தாள். விடிவிளக்கு வெளிச்சத்தில் புத்தகமொன்றைப் புரட்டிக் கொண்டிருந்த மது திரும்பினான்.

''என்னம்மா...''

''உன்கிட்டே கொஞ்சம் பேசணும்...'' - சொல்லிக் கொண்டே கட்டிலில் உட்கார்ந்தாள்.

''எதைப் பத்திப் பேசணும்?''

''உன்னோட கல்யாணத்தைப் பத்தி...''

மது புத்தகத்தை மூடி வைத்து விட்டு - நெற்றியில் ஆச்சர்யக் கோடுகளைக் காட்டினான். ''என்



னோட கல்யாணத்துக்கு இப்ப என்னம்மா அவசரம்? என் உயிர்க்குக் குறி வெச்சு... ரெண்டு பேர் வெளியே காத்திட்டிருக்காங்க... இந்த நிலைமையில...?''

''அந்த நிலைமை எனக்கும் தெரியும்டா... மது! கல்யாணம்ன்னா இப்பவேவா நடத்தப் போறோம்? அந்த அமளியெல்லாம் ஓய்ஞ்சப்புறம்தான் கல்யாணமே!''

''அமளி ஓயட்டும்மா... பேசுவோம்...''

''அதுக்கு முன்னாடி பொண்ணை நிச்சயம் பண்ணிக்கலாமில்லையா?''

''பொண்ணா...?''

''ம்... நான் ஒரு பொண்ணைப் பார்த்து... 'இது தான் எனக்கு மருமகள்'ன்னு முடிவு பண்ணிட்டேன்...''

''நீ... நீ... என்னம்மா சொல்றே?''

''ரசிகா... வை என்னோட மருமகள்ன்னு சொல்றேன்...''

''அம்மா...''

''நீ மனசுல நினைச்சுட்டிருந்ததையே சொல்லிட்டேனா? சந்தோஷம் உம் முகத்துல கொப்பளிக்குதே...''

மது லேசாய் வெட்கப்பட்டான். ''ரசிகா தரப்பிலிருந்து என்ன பதில் வரும்ன்னு தெரியலையே? நான் ஜெயிலுக்கு போய்ட்டு வந்ததை அவ ஒரு டிஸ்குவாலிஃபிகேஷனா நினைக்கலாமே?''

''அவ அப்படி நினைக்கிற பெண்ணில்லை. நீ ஒரு பொண்ணோட மானத்தைக் காப்பாத்திட்டு ஜெயிலுக்குப் போனதை - அவ ரொம்பவும் பெருமையா நினைக்கிறா. ரெண்டு நாளைக்கு முந்தி - மாதவி தன் குழந்தைகளோடு இங்கே வந்து - உன் கால்ல விழுந்து அழுததைப் பார்த்ததும் - ரசிகாவும் கண் கலங்கிட்டா...''

''ரசிகா... என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஒத்துக்குவான்னு தோணலை...''

''டேய்! அவளைக் கல்யாணம் பண்ணிக்க உனக்கு இஷ்டம்தானே?''

''ஆமா...''

''பொறுப்பை எங்கிட்டே விட்டுடு. நான் பார்த்

நுக்கிறேன்... ஒரு நல்ல நாள்ல கிருஷ்ணமூர்த்தியைக் கூப்பிட்டு நான் பேசறேன். மனசளவில ரெண்டு பேரும் ஒரு முடிவுக்கு வந்துட்டா கூடப் போதும்... கல்யாணத்தை எப்ப வேணுமின்னாலும் வெச்சுக்கலாம்...''

பக்கத்திலிருந்த டெலிபோன் கிணுகிணுத்தது.

''நல்ல சகுனம்...'' - நாகரத்தினம்மா சந்தோஷப்பட - மது ரிஸீவரை எடுத்து குரல் கொடுத்தான். ''ஹலோ...''

மறுமுனையில் இன்ஸ்பெக்டர் போஜராஜ் பேசினார்.

''மிஸ்டர் மதுவா?''

''எஸ்... ஹோல்டிங்...''

''மது! ஒரு நிமிஷம் நீங்க ஸ்டேஷனுக்கு வர முடியுமா?''

''என்ன விஷயமாய் இன்ஸ்பெக்டர்?''

''சந்தேகப்படும் வகையில் கோத்தகிரி பஸ் ஸ்டாண்டில் நின்னுகிட்டிருந்த ஒரு ஆணையும் பெண்ணையும் ஸ்டேஷனுக்கு கொண்டு வந்திருக்கோம். அன்னிக்கு உங்க கார்ல ஏறினது அவங்கதானான்னு நீங்க ஐடென்டிஃபை பண்ணனும்...''

''இப்பவே புறப்பட்டு வர்றேன் ஸார்...''

''ஸ்டேஷனுக்கு உங்க கார்ல வராதீங்க. ஜீப்பை காப்ஸோடு அனுப்பிச்சு வெக்கிறேன். வந்துட்டு ஐடென்டிஃபை பண்ணிட்டு நீங்க போயிடலாம்...''

''ஜீப்பை அனுப்பி வையுங்க இன்ஸ்பெக்டர்...''

## 13

''என்ன மாதவ்... பலமான யோசனை...?'' - ராஷ்மி கண்ணாடி டம்ளர்களில் பீரை ஊற்றிக் கொண்டே கேட்டாள்.

''ரசிகாவைப் பத்திதான் யோசிச்சிட்டிருக்கேன்...''

''என்னமோ அவளை கிழிச்சுடப் போறதா சொன்னே?''



''கிழிக்கத்தான் போறேன். நாளைக்குக் காலையில...''

''நீ சொல்றது புரியலை...''

''புரியும் படியா சொல்றேன். மொதல்ல அந்த பீர் டம்ளரைக் குடு...'' - ராஷ்மி நுரை ததும்பும் பீர் டம்ளரை எடுத்துக் கொடுக்க - அதை வாங்கி ஒரே மூச்சில் உள்ளே தள்ளி விட்டு - பீரில் நனைந்த மீசையைத் துடைத்து விட்டுக் கொண்டான். மெல்லிய குரலில் தொடர்ந்தான். ''இன்னிக்கு சாயந்தரம் ஆறு மணிக்கு அவ தர்ற ரெண்டாயிரம் ரூபா பணத்தை வாங்கிகிட்டு - உடனடியாக நாம மைசூர் போயிடப் போறதில்லை...''

''பின்னே?''

''இங்கேயே இருக்கப் போறோம்...''

''இருந்து...?''

''நாளைக்குக் காலையில ஆறு மணிக்கு ரசிகா ஜாக்கிங் போவா. நாம ரெண்டு பேரும் பைக்ல அவளை ஃபாலோ பண்றோம். பனிப்புகை அதிகமா சூழ்ந்திருக்கிற இடத்துல... அவ கதை முடியப் போகுது...''

''எப்படி?''

மாதவ் - பக்கத்திலிருந்த மேஜை டிராயரைத் திறந்து - சாக்குத் துணியில் சுற்றிய அந்த திரி குண்டை எடுத்தான்.

''வெ... வெடி குண்டு...''

''ஆமா... இதுதான் அந்தக் கிளியை பீஸ் பீஸா கிழிக்கப் போகுது. பனிமூட்டம் அதிகமா இருக்கிற இடத்துல - அவ இருக்கிற இடத்தைக் குறி பார்த்து - திரியைக் கடிச்சு - துப்பிட்டு ஆறு செகண்டுக்குள்ளே வீசினா போதும்... ரசிகாவின் உடம்பு கொத்துக்கறி ஆயிடும்... நாம சத்தம் காட்டாமே... வீட்டுக்குத் திரும்பிடலாம்...''

''கிருஷ்ணமூர்த்திக்கு நம்ம மேல சந்தேகம் வராதா?''

''வராது... ரசிகா மதுவைக் கல்யாணம் பண்ணிகிட்டா தானே நமக்குப் பணம் கிடைக்கும். நாம இந்தக் காரியத்தைப் பண்ணியிருக்க மாட்டோம்ன்னுதான் நினைப்பான்...''

''அப்போ நமக்கு வர வேண்டிய பணம்?''

''இதோ பார் ராஷ்மி...! கிருஷ்ணமூர்த்தி கோழை. அவனை மிரட்டி மிரட்டியே - நம்ம பேமிலி தொகையைக் கறந்துடலாம். அவன் நமக்கு பேங்க் மாதிரி. மாசத்துக்கு ரெண்டாயிரம் ரூபாய்க்குக் குறைவில்லாமே அவன்கிட்டயிருந்து வாங்க முடியும். ரசிகா அண்ணனைக் காட்டிலும் புத்திசாலிப் பொண்ணு. அவ உயிரோடு இருந்தா நம்ம கைக்கு சல்லிக்காசு கிடைக்காது...''

''அவ மேல குண்டை வீசப் போறது யாரு...?''

''நீதான்... பில்லியன்ல உட்கார்ந்துகிட்டு - ரசிகாவை பைக் பத்தடி தூரத்துல சந்திக்கும் போது - நீ வெடியோட திரியைக் கடிச்சுட்டு - உடனே அவளைக் குறி பார்த்து வீசிடணும்...''

ராஷ்மி பயமாய் எச்சிலை விழுங்கிக் கொண்டே தலையாட்ட - மாதவ் பீர் பாட்டிலை எடுத்து - வாய்க்கு கொடுத்தான்.

''அண்ணா! மணி ஆறரை... புறப்படலாமா?'' - ரசிகா கிளம்பினாள்.

''பணம் எடுத்துகிட்டியா?'' - கிருஷ்ணமூர்த்தி எழுந்தான்.

''ம்... ஆயிரம் ரூபாய் எடுத்துகிட்டேன்...''

''ஆயிரமா? மாதவ்வுக்கு ரெண்டாயிரம் தர்றதா தானே பேச்சு...?''

''பேச்சு தானே?'' - ரசிகா சிரித்தாள்.

''உனக்கு சரியான துணிச்சல்...''

''அப்புறம்... பாராட்டலாம். வந்து காரை எடு... நம்ம நண்பர்கள் கொட்ற பனியில் காத்திட்டிருப்பாங்க...''

இருவரும் வீட்டைப் பூட்டிக் கொண்டு - கார்க்கு வந்தார்கள். கிருஷ்ணமூர்த்தி ஸ்டீயரிங்கைப் பிடிக்க - கார் கோத்தகிரியின் அரையிருட்டான - குளிரான ரோடுகளில் ஓடியது.

''ரசிகா...''

''ம்...''

''ஆயிரம் ரூபாயைக் கொடுத்தா மாதவ்வுக்கு கோபம் வருமே?''

''வரட்டும்...''

''அவன் மோசமான ஆள்...''



''ஆனா முட்டாள்.''

''அவன் தாக்க ஆரம்பிச்சா?''

''உனக்கும் எனக்கும் கராத்தே தெரியும். தாக்க வேண்டியது தான்...''

''ரசிகா! அவனோட பலம் தெரியாமே நீ பேசறே?''

''ரெண்டு நாளைக்கு முன்னாடி அவன்கிட்டே பேசறப்பவே அவனோட பலத்தைக் கணிச்சுட்டேன். அவனுக்கு பணம்தான் பிரதானம். வேலுவை சுட்ட சம்பவத்தைக் காரணமா வெச்சு அவனால போலீஸுக்குப் போக முடியாது. நம்மகிட்டயிருந்து எவ்வளவு பணம் கிடைக்குதோ... அதை வாங்கிட்டு - 'குட்பை' சொல்லிட்டு போயிட்டே இருப்பாங்க...''

''நீ துணிஞ்ச கட்டையாட்டம் தைரியமா பேசறே! ஆனா எனக்கு அடி வயித்துல ஐஸ் வெச்ச கட்டி மாதிரி திகிலா இருக்கு...''

''நாளைக்குக் காத்தாலே நீ ஒரு காரியம் பண்ணணும் அண்ணா!''

''என்ன?''

''ஷேவ் பண்ணும் போது - கத்தையா வெச்சிருக்கிற இந்த மீசையை எடுத்துட்டு - மஞ்சள் பூசிக் குளி...''

''ஏ... ஏ... ஏய்...''

''பின்னே... என்னண்ணா? ஒரு பிரச்னைன்னு வரும்போது துணிச்சலா இருக்கணும்... பொட்டச்சி நான். தைரியமா இருக்கலை?''

கார் லேக் ஏரியாவை நெருங்கியது.

எல்லா பக்கமும் பனித்திரை. ஹெட்லைட் வெளிச்சம் பனியை விரட்ட, கார் வேகத்தைக் குறைத்துக் கொண்டது. ஊர்ந்தது.

''அண்ணா! பைக் அந்தப் பக்கம் நின்னுட்டிருக்கு...'' - ரசிகா பைக்கை சுட்டிக்காட்ட - அதை நோக்கி காரைக் கொண்டு போனான் கிருஷ்ணமூர்த்தி.

புல்தரையில் - ஸ்டாண்ட் போட்டு பைக் நிறுத்தப்பட்டிருக்க - அதற்கு முட்டுக் கொடுத்து சாய்ந்து உட்கார்ந்திருந்தார்கள் மாதவ்வும், ராஷ்மியும்.

காரை பைக்குக்கு பின்பக்கமாய்க் கொண்டு

போய் நிறுத்தினான் கிருஷ்ணமூர்த்தி. ரசிகா கண்ணாடி ஜன்னலை இறக்கி - குரல் கொடுத்தாள்.

''மாதவ்...''

''.....'' - பதிலில்லை.

''மாதவ்...''

''.....'' - மௌனம்.

''என்ன தூங்கிட்டாங்களா? அண்ணா! ஹெட்லைட்டை அடி...''

கிருஷ்ணமூர்த்தி அடித்தான்.

காரின் ஹெட்லைட் வெளிச்சக் கற்றைகள் குப்பென்று அவர்கள் மேல் பட - ரசிகாவும் கிருஷ்ணமூர்த்தியும் முகம் மாறினார்கள்.

மாதவ்வும், ராஷ்மியும் உடைகள் பூராவும் தெளிக்கப்பட்ட ரத்தத் திற்றல்களோடு - உட்கார்ந்த நிலையிலேயே பிணமாகியிருந்தார்கள்!

## 14

பெட்ரோ மாக்ஸ் விளக்குகள் புகைந்து கொண்டிருக்க - இன்ஸ்பெக்டர் போஜராவ் - மாதவ்வின் உடம்பையும், ராஷ்மியின் உடம்பையும் புரட்டினார். அருகில் நின்றிருந்த சப்-இன்ஸ்பெக்டர் கௌடாவிடம் சொன்னார்.

''ஏதோ கனமான ஆயுதத்தாலே... தலையிலே அடிச்சிருக்காங்க...''

''ரத்தத்தோட ப்ரீஸிங் கன்டிஷனைப் பார்க்கும்போது சம்பவம் நடந்து ரெண்டு மணி நேரம் தான் இருக்கும்ன்னு தோணுது ஸார்...''

போஜராவ் கொஞ்சம் தள்ளி நின்றிருந்த கிருஷ்ணமூர்த்தியை நோக்கிப் போனார். ''நீங்களும் உங்க சிஸ்டரும் இந்த ஸ்பாட்டுக்கு வரும் போது நேரம் எவ்வளவு இருக்கும்...?''

''ஆறரை ஸார்.''

''இந்தப் பக்கம் நீங்க எதுக்காக வந்தீங்க?...''

''வழக்கமா காரைக் கொண்டாந்து இந்த லேக் ஏரியா பக்கம் நிறுத்திட்டு நானும் என்னோட சிஸ்டரும் வாக் போவோம்...''

பக்கத்தில் நின்றிருந்த ரசிகா குறுக்கிட்டாள்.



''ஏதோ ஒரு காதல் ஜோடி உட்கார்ந்து பேசிகிட்டிருக்கு. தொந்தரவு பண்ணாம போயிடலாம்ன்னு தான் வாக்கிங் ரூட்டை மாத்தினோம். ஆனா அண்ணன்தான்... காரோட ஹெட்லைட் வெளிச்சத்துல அவங்களைப் பார்த்துட்டு சந்தேகமா சொன்னார். இறங்கிப் பார்த்தப்பத்தான் இந்த விபரீதமே தெரிஞ்சது. உடனே உங்களுக்கு போன் பண்ணினோம்.''

''தகவல் கொடுத்ததுக்கு ரொம்பவும் நன்றி மிஸ் ரசிகா! இதுக்கு முன்னாடி இதே இடத்துல என்னிக்காவது இவங்களைப் பார்த்திருக்கீங்களா...?''

''ஊ... ஊஹூம்...'' - உதட்டைப் பிதுக்கினாள் ரசிகா.

''நீங்க கிருஷ்ணமூர்த்தி...?''

''நானும் பார்த்ததில்லை ஸார்.''

''மிஸ்டர் கௌடா...'' - போஜராவ் எஸ்.ஐ.யிடம் திரும்பினார்.

''ஸார்.''

''பைக்கோட ரெஜிஸ்ட்ரேஷன் நெம்பரை நோட் பண்ணீங்களா?''

''பண்ணியிருக்கு ஸார்.''

''எந்த ஊரு ரெஜிஸ்ட்ரேஷன்?''

'' TDV ன்னு போட்டிருக்கு.''

''TDV ன்னா கோயமுத்தூர் ரெஜிஸ்ட்ரேஷன். நாளைக்கு RTO ல விசாரிச்சா... அட்ரஸ் கிடைக்கும்.''

மெள்ள அவரின் பார்வை - பைக்கின் கேரியர் பாக்ஸின் மேல் போய் நின்றது.

''கௌடா!''

''ஸார்...''

''பைக்கோட கேரியர் பாக்ஸைத் திறந்து பார்த்தீங்களா?''

''இன்னும் பார்க்கலை ஸார்.''

''மொதல்ல அதைப் பார்க்க வேண்டாமா...?'' - மெள்ள போய் அந்த பைக்கின் கேரியர் பாக்ஸை நெருங்கினார். அதன் லாக்கை விடுவித்து திறந்தார்.

உள்ளே -

ஒரு மஞ்சள் பாலீஷ் துணி, ப்ளக் ஸ்பேனர்,
ஸ்க்ரு டிரைவர், காலிகோ பைண்ட் செய்யப்பட்ட
- ஒரு சிறிய நோட்.

அந்த நோட்டை எடுத்தார் போஜராவ். பிரி
த்தார். PETROL CONSUMER CARD. - விவரம் கண்
ணில் பட்டது. எண் 5146.

அடுத்த பக்கத்தைப் புரட்டினார்..

'SAVE FUEL' - ரப்பர் ஸ்டாம்ப் வாசகத்துக்குக்
கீழே MORNING STAR PETROL BUNK
KOTAGIRI - டைப் அடித்த வாசகங்கள்
தெரிந்தன.

போஜராவ் கொஞ்சம் பிரகாசமானார்.
''மார்னிங் ஸ்டார் - பெட்ரோல் பங்கில் இருந்து -
இவனுக்கு கன்ஸ்யூமர் கார்டை கொடுத்திருக்
கிறார்கள். அங்கே போய் விசாரித்தால் இவன் யார்
என்கிற விபரம் தெரிந்துவிடும். வீட்டையும்
கண்டுபிடித்து விடலாம்.''

போஜராவ் கான்ஸ்டபிள்களுக்கு - 'டெட்பா
டியை' போஸ்ட் மார்ட்டத்திற்குக் கொண்டு போகச்
சொல்லி - இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்துவிட்டு -
கௌடா ஜீப்பை நோக்கிப் போனார். ரசிகா
குறுக்கிட்டு ''எக்ஸ்க்யூஸ்மீ'' என்றாள்.

''எஸ்...'' போஜராவ் நின்றார்.

''நாங்க வீட்டுக்கு போலாமா ஸார்...?''

''தாராளமா...''

கிருஷ்ணமூர்த்தியும், ரசிகாவும் - கொஞ்சம்
தள்ளி நின்றிருந்த பியட் காரை நோக்கிப் போனார்
கள்.

கார்க்குள் ஏறி உட்கார்ந்து ஸ்டியரிங்கைப்
பிடித்த ரசிகா ஒரு நீளமான பெருமூச்சை விட்டாள்.

''கடவுள் நம்ம பக்கம்.''

''மாதவ்வையும், ராஷ்மியையும் யார் பழி தீர்த்து
விட்டார்கன்னு தெரியலையே ரசி...?''

''யாராயிருந்தா என்ன...? கொலைகளைச்
செய்த பேர் வழி ஆணா இருந்தா... 'நூறாண்டு கா
லம் வாழ்க!' பெண்ணா இருந்தா 'தீர்க்க சுமங்கலி
பவ!' ''

''ஆச்சர்யமாயிருக்கு!''

கார் நகர்ந்தது மெல்ல. ''அண்ணா! இனிமே நீ



யாரையும் பார்த்துப் பயப்பட வேண்டிய அவசி
யமே இல்லை... போலீஸ் ஏதாவது விசாரணைக்கு
வந்தா... ஒவ்வொரு கேள்விக்கும் யோசிச்சு யோ
சிச்சு பதில் சொல்லணும். உன்னைப் பொறுத்தவ
ரைக்கும் மாதவ் யாரோ ஒரு ஆள். அவனை நீ மொ
தல் மொதலா பார்த்ததே பொணமாத்தான்.''

''ரசி! எனக்கொரு சந்தேகம்...''

''என்ன?''

''மாதவ் - ராஷ்மியைக் கொலை செஞ்ச கொ
லையாளிக்கு நம்மையும் தெரிஞ்சிருக்க வாய்ப்பி
ருக்கு இல்லையா...?''

ரசிகா இறுக்கிட்டாள்... மெலிதாய்.

''அண்ணா! நீ சொன்ன பாயிண்ட் கரெக்ட். நமக்
கும் மாதவ்க்கும் உள்ள தொடர்பு கொலையா
ளிக்கு தெரிஞ்சிருந்தா அது ஆபத்தான விஷயம்.
அந்த கொலையாளி... போலீஸ்ல மாட்டி கிட்டா...
நம்ம ரெண்டு பேரையும் கைகாட்டாமே இருக்க
ணும். அவன் கை காட்ற பட்சத்துல... நாம மாட்
டிக்கத்தான் வேணும்...''

கிருஷ்ணமூர்த்தி கர்ச்சீப்பால் நெற்றி வியர்
வையை ஒற்றிக் கொண்டான்.

**மா**ர்னிங் ஸ்டார் பெட்ரோல் பங்க்கில் -
கன்ஸ்யூமர் கார்டைக் காட்டி - பங்க் ஓனர் மன்சூர்
அலியை விசாரித்தார், இன்ஸ்பெக்டர் போஜராவ்.

மன்சூர் அலி - பதட்டமாய் லெட்ஜரை எடுத்துப்
பார்த்து விட்டு - பெயரைச் சொன்னார். ''எச். மா
தவ்... ஸார்.''

''அட்ரஸ்...?''

''நெம்பர் ஃபோர்ட்டீன், க்ரீன் க்ராஸ் ரோடு,
குஞ்சப்பனை.''

''அந்த மாதவ்வை உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும் ஸார்... ரெண்டு நாளைக்கு ஒரு தரம்
வந்து பெட்ரோல் போட்டுக்கிட்டு போவாரு. கூட
வே ஒரு பொண்ணும் இருக்கும்.''

''அந்தப் பொண்ணோட பேரு தெரியுமா?''

''ராஷ்மின்னு கூப்பிடுவார் ஸார்.''

''மாதவ்க்கு என்ன தொழில்?''

''தெரியலை ஸார்...''

"அந்தப் பொண்ணு ராஷ்மி அவரோட ஒய்ஃப்பா...?"

"பார்த்தா அப்படி தெரியலை ஸார். அந்தப் பொண்ணை அவர் வெச்சிட்டிருக்கிறதா பரவலா பேச்சு..."

போஜராஜ் கௌடாவின் பக்கம் திரும்பினார். "மாதவ் வோட பாண்ட் பாக்கெட்டிலிருந்தும், சர்ட் பாக்கெட்டிலிருந்தும் எடுத்த 'திங்க்ஸ்'ல சாவி ஏதாவது இருந்ததா...?"

"ரெண்டு சாவி இருக்கு சார்."

"கையோடு கொண்டு வந்திருக்கீங்களா...?"

"கொண்டு வந்திருக்கேன் ஸார்."

"வாங்க... குஞ்சப்பனைக்கு போய்... மாதவ்வோட வீட்டைப் பார்ப்போம்." - பெட்ரோல் பங்க் மன்சூர் அலியிடம் விடை பெற்றுக் கொண்டு - ஜீப்பில் கிளம்பினார்கள் போஜராஜும், கௌடாவும்.

சில நிமிஷ வேகமான பயணம்.

குஞ்சப்பனை கிராமம் இருட்டாய் வந்தது. மலையின் சரிவில் உட்கார்ந்திருந்த கிராமம் அது. தெரு விளக்குகள் சொற்பமாய் தெரிந்தன. ஒரு டீக்கடை முன்பு ஜீப்பை நிறுத்தி - க்ரீன் க்ராஸ் ரோட்டை, மப்ளர் சுற்றிய ஆசாமியிடம் விசாரித்தார்கள். அவன் வழி சொன்ன பக்கம் ஜீப்பை விரட்டினார்கள். இரண்டு மேடுகளை சிரமமாய்க் கடந்து - இருட்டில் வீட்டின் எண்களைப் பார்த்து - 14 - என்ற எண்ணை பெயிண்டில் ரவுண்ட் அப் பண்ணி எழுதியிருந்த - வீட்டுக்கு முன்பாய் - ஜீப்பை மௌனமாக்கினார்கள்.

கௌடா தன் கையிலிருந்த டார்ச்சை - வீட்டுக் கதவின் மேல் அடித்தார்.

கதவில் பூட்டு தொங்கியது. மாதவ்விடமிருந்து எடுத்த சாவிகளை உபயோகப்படுத்தி - வீட்டின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனார்கள்.

இரண்டே அறைகள். அந்த இரண்டு அறைகளையும் - வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து அலசினார்கள். சேலைகள், விதவிதமான ஜெர்கின் கோட்டுகளோடு ஒரு காட்ரேஜ் பீரோ; சுவரோடு பதிக்கப்பட்ட ஒரு அலமாரி. உள்ளே வெளிநாட்டு ஸ்காட்ச்



பாட்டில்களின் அணி வகுப்பு. பெரும்பாலானவை காலி பாட்டில்கள். அருகே ஒரு காமிரா, பைனாகுலர். கோல்ப் விளையாட்டுக்கு உபயோகப்படும் பந்துகள்.

மேஜைக்கு வந்தார் போஜராஜ். முதல் இழுப்பறையைத் திறந்தார். ஒரு பிளாஸ்டிக் கவர் கண்ணில் பட்டது. எடுத்தார். அதன் உறையைப் பிரித்து உள்ளே பார்வை போன போது ஆச்சரியப்பட்டார். ஒட்டுத்தாடி, மீசை, விக், பிளாஸ்டிக் மூக்கு... வரிசையாய் கண்ணுக்குத் தெரிந்தது.

பிளாஸ்டிக் கவரை எடுத்து - மேஜையின் மேல் வைத்து விட்டு - இரண்டாவது இழுப்பறையைத் திறந்தார் போஜராஜ்.

சாக்குத் துணியில் சுற்றப்பட்ட அது கனிசமாய் கண்ணுக்கு சிக்க - எடுத்தார். சாக்குத் துணியை அவிழ்க்க - உதடுகள் தன்னிச்சையாய் "மை குட்னஸ்" என்று அசைந்தது. திரும்பிப் பார்த்த கௌடாவின் மனதில் - அந்த வெடி குண்டு திகிலோடு ஒரு குளிரைப் பாய்ச்சியது.

"ஸார்...! ரெண்டு பேருமே... ஆபத்தான ஆசாமிகளா இருப்பாங்க போலிருக்கு... இல்லீகல் காண்டாக்ட்ஸ் இல்லாமே இதெல்லாம் இருக்காது ஸார்...?"

"ராத்திரி எவ்வளவு நேரமானாலும் பரவாயில்லை. இந்த வீட்டை செண்டிமீட்டர், செண்டிமீட்டரா... அலசிட்டு தான் போகணும். ரெண்டு பேர்கிட்டேயும் என்னமோ தப்பு இருக்கு..."

"பக்கத்து வீட்ல இருக்கிற யாரையாவது விசாரிச்சு பார்க்கட்டுமா... ஸார்...?"

"நீங்க போய் விசாரிங்க... நான் வீட்டைக் கிளறிட்டிருக்கேன்". போஜராஜ் சொல்ல - கௌடா வீட்டினின்றும் வெளியே வந்து - காம்பௌண்ட் கேட்டைக் கடந்து பக்கத்து வீட்டுக்குப் போனார்.

காலிங் பெல்லுக்கு வேலையைக் கொடுக்க - கதவு நிமிஷ நேரத்திற்குப் பின் தயக்கமாய் திறந்தது.

கதவுக்குப் பின்னால் கம்பளியைப் போர்த்திக் கொண்டு ஒருவர் நின்றிருந்தார்.

போலீஸ் யூனிபார்மைப் பார்த்ததும் முகம்

மாதினார்.

''ஏ... என்ன வே... வேணும்... ஸார்?''

''உங்க பேரென்ன?'' கௌடா கேட்டார்.

''தேவராஜன்...''

''இந்த வீட்ல நீங்க மட்டும்தான் இருக்கீங்களா...?''

''நானும் ஒய்ஃபும்தான் இருக்கோம்... அவ இப்போ ஊருக்குப் போயிருக்கா... ஏன்... ஸார்... என்ன விஷயம்...?''

''பக்கத்து வீட்ல யார் குடியிருக்காங்கன்னு தெரியுமா?''

''தெரியும் ஸார். மாதவ் - ராஷ்மிங்கிற ரெண்டு பேர் அங்கே இருக்காங்க...''

''எத்தனை வருஷமா அங்கே குடியிருக்காங்க?''

''ரெண்டு வருஷமா...''

''அவங்க நடவடிக்கையெல்லாம் எப்படி...?''

''ஏ... எதுக்காக ஸார்... இதையெல்லாம் கேக்கறீங்க...?''

''மொதல்ல - கேட்ட கேள்விக்கு பதிலைச் சொல்லுங்க...''

தேவராஜ் தயங்கிவிட்டுத் தொடர்ந்தார். ''மாதவ் - ராஷ்மி நடவடிக்கைகள் கொஞ்சம் மர்மம்தான் ஸார். நினைச்ச நேரம் பைக்ல புறப்பட்டுப் போவாங்க. நினைச்ச நேரம் வீட்டுக்கு வருவாங்க. ராத்திரியெல்லாம் குடிச்சுட்டு... கூத்தடிப்பாங்க...''

''நீங்க அவங்க கூட பேசுவீங்களா...?''

''குடிவந்த புதுசுல பேசிட்டிருந்தேன். அப்புறம் அவங்க நடவடிக்கை சரியில்லாததினாலே... பேசுறதை விட்டுட்டேன்...''

''மாதவ் - ராஷ்மியைப் பார்க்க... யார் யார் வருவாங்க...?''

''நான் அதையெல்லாம் கவனிக்கிறதில்லை ஸார்...!''

''ரெண்டு பேரையும் கடைசியாக எப்ப பார்த்தீங்க...?''

''நேத்திக்கு சாயந்திரம் அஞ்சரை மணி இருக்கும் ஸார். நான் தோட்டத்துல மண்ணைக் கொத்தி



விட்டுகிட்டு இருந்தப்ப ரெண்டு பேரும் போனாங்க...''

''நேத்தைக்கும்... அதுக்கு... முந்தின... தினமும் மாதவ் - ராஷ்மியைத் தேடி வந்தவங்களை... ஞாபகப்படுத்தி சொல்ல முடியுமா...?''

தேவராஜன் யோசித்து விட்டு தலையாட்டினார்.

''ஸாரி... ஸார்... அவங்க வீட்டு விவகாரங்களை நான் கவனிக்கிறதில்லை...''

இரவு பதினோரு மணி. டெலிபோன் அலறும் சத்தம் கேட்டு விழித்துக் கொண்டான் மது. உல்லன் போர்வைக் குள்ளிருந்து வெளிப்பட்டு ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ...''

''மிஸ்டர் மது...?''

''எஸ்.''

''நான் இன்ஸ்பெக்டர் போஜராவ்...''

''சொல்லுங்க ஸார், எனிதிங்க் இம்பார்ட்டெண்ட்...?''

''நீங்க உடனே ஜி.ஹெச்.மார்ச்சுவரிக்கு வரமுடியுமா?''

''ஃபார் வாட்...?''

''ஒரு ஆண், ஒரு பெண் டெட்பாடீஸ் கிடைச்சிருக்கு. நீங்க வந்து பார்த்து ஐடெண்டிஃபை பண்ணணும்...''

''என்ன ஸார்... நேத்திக்கும் இப்படித்தான் ஸ்டேஷனுக்கு கூப்பிட்டு யாரோ ரெண்டு பேரைக் காட்டி ஐடென்டிஃபை பண்ணச் சொன்னீங்க... இன்னிக்கும் இந்த ராத்திரியில்...''

''ஸாரி... மிஸ்டர்... மது! நீங்க ஏற்கனவே சொன்ன மொத்த அடையாளங்களோடு இவங்க ஒத்துப் போறாங்க. நீங்களும் வந்து பார்த்து கன்ஃபார்ம் பண்ணிட்டா... கேஸை ஃபர்தர் இன்வெஸ்டிகேஷனுக்குக் கொண்டு போலாம்...''

''இப்பவே வரணுமா...?''

''ப்ளீஸ்...! ஜீப் உங்களுக்காக வந்துட்டிருக்கு... சிரமம் பார்க்காம வந்து ஒரு நிமிஷம் பார்த்துட்டு போயிருங்க மிஸ்டர் மது...''

''வர்றேன்.'' - ரிஸீவரை வைத்த போது - காம்

பௌண்ட் கேட் அருகே ஜீப்பின் சத்தம் கேட்டது.

மது அவசர அவசரமாய் நைட் கவுனிலிருந்து பேண்ட் சர்ட்டுக்கு மாறி வெளியே வந்தான். வாட்ச்மேனிடம் சொல்லிக் கொண்டு - ஜீப்பில் ஏறினான்.

ஜீப் புறப்பட்டு - சில நிமிடங்களில் ஹாஸ்பிட்டலைத் தொட நிசப்தமான பின்னணியில் - மார்ச்சுவரி அறை மட்டும் - வெளிச்சமாய் தெரிந்தது. போஜராவும் கௌடாவும் அறை வாசலில் காத்திருந்து - மதுவை எதிர் கொண்டார்கள்.

''வாங்க மிஸ்டர் மது...''

உள்ளே கூட்டிப் போனார்கள். மார்ச்சுவரியின் ஜில்லிட்ட அறையில் பார்மலின் அவஸ்தையாய் மணத்தது.

மாதவ் - ராஷ்மியின் உடல்கள் கிடத்தப்பட்டிருந்த தகரமேஜையை போஜராவ் நெருங்கினார்.

''பாருங்க மிஸ்டர் மது...''

மது பார்த்தான். மாதவ் - ராஷ்மி இருவருமே வாய் பிளந்து - கண்கள் நிலைத்து மேற்கூரையை வெறித்துப் பார்த்தார்கள். மண்டையிலிருந்தும் கோடு கோடாய் வழிந்த ரத்தம் - கெட்டியாய் உறைந்து போயிருந்தது.

மது அரை நிமிட நேரம் அந்த உடல்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு - போஜராவை ஏறிட்டான்.

''இவங்க இல்லை இன்ஸ்பெக்டர்!''

''ஆர்... யூ... ஷ்யூர்...?''

''ஷ்யூர்...''

''கான்ஸ்டபிள்!'' - போஜராவ் திரும்பிப் பார்த்து குரல் கொடுக்க - ஒரு கான்ஸ்டபிள் பிளாஸ்டிக் உறையோடு உள்ளே வந்தார்.

''ஸார்...''

''ரெண்டு பாடிகளுக்கும் அதை ஒட்ட வை...''

கான்ஸ்டபிள் மாதவ் - ராஷ்மியின் உடல்களுக்கு பக்கத்தில் போய் - பிளாஸ்டிக் உறையிலிருந்த - மாறுவேஷ சாதனங்களை - ஒவ்வொன்றாய் வெளியே எடுத்து - ஒட்ட வைக்க ஆரம்பித்தார்.

மாதவ்வுக்கு மீசை, புருவம், கிருதா, ரப்பர் மூக்கு...



ராஷ்மிக்கு தூக்கலான பல்வரிசை செட், கன்னங்களை உப்பலாய் காட்டக் கூடிய பிளாஸ்டிக் ஜெல்லி, அமுங்கிற ரப்பர் மூக்கு...

கான்ஸ்டபிள் அவைகளைப் பொருத்த பொருத்த மதுவின் நெற்றி ஆச்சரியத்தில் விரிந்து கொண்டே போயிற்று.

''இன்ஸ்பெக்டர்! இவங்களேதான்...''

போஜராவ் தோள்களைக் குலுக்கினார். சிரித்தார். ''கன்ஃபார்ம்ட்.'' பெருமிதமாய் சொன்னவர் மதுவிடம் கேட்டார்.

''மாதவ் - ராஷ்மி - இந்த பேர்களை எங்கேயாவது கேட்டிருக்கீங்களா?''

''இல்லை...''

''உங்களைக் கொலை பண்ண முயற்சித்த இந்த ரெண்டு பேரை வேற யாரோ கொலை பண்ணியிருக்காங்க... டெட்பாடியை மொதல்ல பார்த்து தகவல் சொன்னது யார் தெரியுமா மிஸ்டர் மது...?''

''யார்...?''

''கிருஷ்ணமூர்த்தியும் ரசிகாவும்.''

''சம்பவம் நடந்தது எங்கே?''

''லேக் ஏரியாவில்...''

''இவங்க யார்ன்னே எனக்குத் தெரியாது இன்ஸ்பெக்டர். இவங்க எதுக்காக என்னைக் கொலை பண்ண முயற்சிக்கணும்? இப்போ இவங்க ஏன் கொல்லப்பட்டிருக்காங்க...? எல்லாமே குழப்பமா இருக்கு...''

போஜராவ் தன் கையிலிருந்த ஒரு சின்ன டயரியை நீட்டினார்.

''மது! இதைப் பாருங்க கொஞ்சம்.''

மது வாங்கிப் பார்த்தான். ''இதில என்ன ஸார் இருக்கு?''

''உங்க டெலிபோன் நெம்பர் இருக்கு. அது மட்டுமில்லை. கிருஷ்ணமூர்த்தி வீட்டு டெலிபோன் நெம்பரும் இருக்கு.''

''ஸார்! என்னையும் - என்னோட உயிரைக் காப்பாற்றின கிருஷ்ணமூர்த்தி - ரசிகாவையும் இந்த ரெண்டு பேரு பழி தீர்க்கப் பார்த்தாங்க. அடிக்கடி டெலிபோன் பண்ணி மிரட்டிகிட்டும் இருந்தாங்க... ஆனா இன்னிக்கு யாராலோ... இவங்களுக்கு அந்த பரிதாப முடிவு ஏற்பட்டிருக்கு... உங்க

போலீஸ் பார்வைப்படி பார்த்தா இது கொலை. என்னோட பார்வைப்படி பார்த்தா தண்டனை. வேலுவை கட்டுக் கொன்ன இவங்களுக்கு - கோ ரோ ஜட்ஜா இருந்து மரண தண்டனை வழங்கியிருக்காங்க... அந்த ஜட்ஜுக்கு என்னோட நன்றி.

மாதம் ஒன்று கரைந்து போயிருக்க - அன்றைக்கு மதுவின் பங்களாவில் எளிமையாய் அந்த நிச்சயதார்த்த விழா நடந்து கொண்டிருந்தது. மதுவின் குடும்பத்தைச் சேர்ந்த பெரியவர்களும், கிருஷ்ணமூர்த்தியின் குடும்பத்தைச் சேர்ந்த பெரியவர்களும் - அரைவட்டமாய் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தார்கள்.

நாகரத்தினம்மா கையில் - தேங்காய், பூ, பழம் நிரம்பிய வெள்ளித்தட்டை வைத்தபடி சுற்றியிருந்தவர்களைப் பார்த்து பேசிக் கொண்டிருந்தாள்.

''என் மகன் மதுவை ஒரு ஆபத்திலிருந்து காப்பாற்றிய ரசிகாவை - என் மருமகளாக்கிக் கொள்வதில் ரொம்பவும் சந்தோஷப்படுகிறேன். 'உங்கள் தங்கையை என் மகனுக்கு கொடுக்க வேண்டும்' என்று நான் கிருஷ்ணமூர்த்தியைக் கேட்டபோது - அவர் சந்தோஷமாய் ஒப்புக் கொண்டார். அவர்க்கு என் நன்றி. மதுவுக்கும் ரசிகாவுக்கும் வருகிற இருபத்தி மூணாம் தேதி வெள்ளிக்கிழமை நமது பங்களாவிலேயே கல்யாணம் நடைபெற உள்ளது. இந்தக் கல்யாணத்தை நிச்சயம் செய்து கொள்ளும் வகையில் - பெரியோர்களாகிய உங்கள் முன்னால் - கிருஷ்ணமூர்த்தியும் நானும் தாம்பூலத்தட்டை மாற்றிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.''

எல்லோரும் கைகளைத்தட்ட கிருஷ்ணமூர்த்தியும் நாகரத்தினம்மாவும் தாம்பூலத்தட்டுக்களை மாற்றிக் கொண்டார்கள்.

பட்டுச்சட்டையும் - வேஷ்டியுமாய் உட்கார்ந்திருந்த மது பட்டுப் புடவையிலும், நகைகளிலும் நிரம்பியிருந்த ரசிகாவைப் பார்த்து சந்தோஷமாய் கண் சிமிட்டினான். ரசிகாவும் அக்கம் பக்கம் பார்த்துவிட்டு - உதட்டை வேகமாய் கோணி பழிப்பு காட்டினாள்.

நிச்சயதார்த்த விருந்து நடந்து கொண்டிருந்த



போது - இன்ஸ்பெக்டர் போஜராஜும் சப்-இன்ஸ்பெக்டர் கௌடாவும் யூனிபார்மை தவிர்த்துவிட்டு - வேஷ்டி சட்டையில் உள்ளே வந்தார்கள். கிருஷ்ண மூர்த்தி அவர்களை எதிர்கொண்டு வரவேற்றான்.

''வாங்க... ஸார்... ஃபங்க்ஷன் முடிஞ்சு போனதும் வர்றீங்களே?''

''நமக்கு விருந்துதானே முக்கியம்...?''

மது எழுந்து வந்து கை குலுக்கிக் கொண்டே கேட்டான். ''மாதவ் - ராஷ்மி கேஸ் என்ன ஸார் ஆச்சு...?''

''கடந்த ஒருவார காலமா... சில தடயங்கள் கிடைக்க ஆரம்பிச்சிருக்கு. கொலையாளியை சீக்கிரமாவே அமுக்கிடுவோம்.''

அருகில் நின்றிருந்த நாகரத்தினம்மா குறுக்கிட்டாள். ''இன்ஸ்பெக்டர் மங்கள காரியம் நடந்திட்டிருக்கும்போது - அந்தக் கொலைக்கேஸைப்பற்றி பேசறது அவசியமா? மதுவையும், ரசிகாவையும் ஆசிர்வாதம் பண்ணிட்டு - விருந்து சாப்பிடப் போங்க...''

''அதும் சரிதான்...''

## 15

ரசிகாவுக்கும் மதுவுக்கும் கல்யாணம் முடிந்த இரண்டாவது நாள் காலை. மதுவின் அறையில் உட்கார்ந்து பரிசுப் பெட்டிகளை பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்த ரசிகாவை டெலிபோன் அலறி ஈர்த்தது. ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தாள்.

''ஹலோ...''

''என்னம்மா... கல்யாணப் பொண்ணு சௌக்யமா...?'' - மறுமுனையில் கிருஷ்ணமூர்த்தி இண்டலாய் கேட்டான்.

''சௌக்யமே'' ரசிகா சிரித்தாள். ''என்னண்ணா... இவ்வளவு காலங்காத்தாலே போன்...?''

''சொல்றேன்! மாப்பிள்ளை இருக்காரா பக்கத்துல?''

''குளிச்சிட்டிருக்கார்.''

''அத்தை...?''

''மாடியில் இன்னமும் தூங்கிட்டிருக்காங்க...''

''நல்லதாப் போச்சு...''

''என்னண்ணா ஒரே சஸ்பென்ஸ் வெக்கிறே... என்ன விஷயம்?''

''ரசி...''

''ம்...''

''இப்ப... நான் சொல்லப் போறதைக் கேட்டு அதிர்ச்சியடையக் கூடாது... டெலிபோன்ல எமோஷனைக் காட்டக் கூடாது. அய்யோ... அண்ணா, அப்படியான்னு கத்தக் கூடாது.''

''எ... எ. என்ன சொல்லப் போறே?''

''உண்மையைச் சொல்லப் போறேன். நான் இப்போ சொல்லப்போகிற விஷயம் உன்னைத் தவிர வேற யார்க்கும் தெரியக்கூடாது.''

''ச... சரி... சொல்லலை...''

''செத்துப்போன நம்ம அம்மா, அப்பா மேல ஆணையா யார்கிட்டேயும் சொல்லக் கூடாது...''

''சத்தியமா சொல்லலை...''

''மாதவ் - ராஷ்மியைக் கொலை பண்ணினது நான்தான்.''

ரசிகா விருட்டென்று எழுந்து நின்றாள்.

''அ... ண்... ணா!''

''பார்த்தியா எமோஷனைக் காட்ட ஆரம்பிச்சுட்டே? அமைதியா உட்கார்ந்து கதை கேட்கிற மாதிரி கேளு.''

நடுக்கமாய் உட்கார்ந்தாள் ரசிகா. மறுமுனையில் கிருஷ்ணமூர்த்தி தொடர்ந்தான். ''எனக்கு வேற வழி எதுவும் தோணலை ரசி. மாதவ்வைப் பத்தி எனக்குத் தெரியும். அவன் ஒரு மூர்க்கமான மிருகம். அவனைப் பகைச்சுகிட்டவங்க நிம்மதியா வாழவே முடியாது. உன்னோட வாழ்க்கை நிம்மதியா அமையணும்ன்னா... அவனும் ராஷ்மியும் உயிரோடு இருக்கக் கூடாதுங்கிற முடிவுக்கு வந்தேன். இரண்டாயிரம் ரூபாய் பணம் தர்றதா சொன்ன அன்னிக்கு நான் மாதவுக்கு போன் பண்ணி - அஞ்சரை மணிக்கே லேக் ஏரியாவுக்கு வரச்சொல்லி - மறைஞ்சு நின்னு வீல் ஸ்பேனராலே... ரெண்டு பேர் தலையிலேயும் அடிச்சு...



எமலோகத்துக்கு அனுப்பி வெச்சேன்...''

''அ... ண்... ணா...!''

''பார்த்தியா...? மறுபடியும் எமோஷனல். மாப்பிள்ளை குளியலறையிலிருந்து வர்றதுக்குள்ளே மத்ததையும் சொல்லி முடிச்சுடறேன்... ரசி! ரெண்டு பேரையும் தீர்த்துக் கட்டி - பைக்குக்கு முட்டுக் கொடுத்து உட்கார வெச்சுட்டு - மறுபடியும் நான் வீட்டுக்கு வந்தேன். குளிச்சேன். வேணுமின்னே லேட் பண்ணி - ஆறரை மணிக்கு நீயும் நானும் லேக்குக்கு போனோம்... அப்புறம்... நடந்ததுதான் உனக்குத் தெரியுமே...?''

ரசிகா வியர்த்தாள்.

''அ... ண்... ணா! என்னால நம்ப முடியலை...''

''ஹண்ட்ரெண்ட் பர்செண்ட் நீ நம்பலாம்...! போலீஸ் பிரம்ம பிரயத்தனம் பண்ணினாலும் என்னைப் பிடிக்க முடியாது. ஆனா நான் சட்டத்தை ஏமாற்ற விரும்பலை. போலீஸ் என்னைக் கைது பண்ணினா எனக்கு என்ன தண்டனை கிடைக்கும்ங்கிற சட்ட ஞானம் எனக்குத் தெரியும். அதனால என்னை நானே தண்டிச்சுக்கப் போறேன்...''

''அ... ண்... ணா!''

''ரசி... நான் ஒரு கொலைகாரன்னு வெளி உலகத்துக்கு தெரியவே கூடாது. அதைக் கட்டிக் காக்கிற வலிமை உன்கிட்டேதான் இருக்கு. குறுக்கு வழியில் பணக்காரனாக ஆசைப்பட்ட எனக்கு இந்த தண்டனை அவசியம். இன்னும் சில செகண்ட்ஸ்ல என்கிட்டயிருந்து ஒரு அலறல் சத்தம் கேட்கும். நான் பண்ணிக்கப் போறது தற்கொலை. ஆனா வெளியுலகத்துக்கும் போலீஸுக்கும் இது ஒரு விபத்து. உன்கூட இப்ப டெலிபோன்ல பேசிகிட்டே - டி.வி. பெட்டியை ரிப்பேர் பார்த்திட்டிருக்கேன். மின்சாரம் சப்ளையாகிற டி.வி. பெட்டியின் முக்கிய பிரதேசத்துக்குள்ளே கையை விட்டு...

சொன்ன அதே விநாடி -

''ஈஈசசசசசச'' - ஒரு அமானுஷ்ய அலறல். ரிஸீவர் தட்டென்று தெறித்து விழும் சத்தம்.

''அ... ண்... ணா... ஆ...!'' வீறிட்டாள் ரசிகா.

**வ**லது கை கருகி - கவரோரமாய் - மரக்கட்டையாய் விழுந்து கிடந்தான் கிருஷ்ணமூர்த்தி. போலீஸ் பரவியிருந்தார்கள். ரசிகா அழுது - உலர்ந்த க கிதமாய் - கதவுக்கு சாய்ந்து நின்றிருக்க - பக்கத்தில் மது, நாகரத்தினம்மா, கனமான துயர முகங்களோடு தெரிந்தார்கள்.

போஜராவ் ரசிகாவை நெருங்கினார்.

''மிஸஸ் ரசிகா! உங்க ப்ரதர் இதுக்கு முன்னாடி டி.வி. பெட்டியை ரிப்பேர் பார்த்திருக்காரா?''

''இ... இ... இல்லை... இ... இதுதான் முதல் தடவை...'' - கண்ணீரை அடக்கி விம்மலை விழுங்கிக் கொண்டு பேசினாள் ரசிகா.

''டெலிபோன்ல பேசிகிட்டே எப்படி டி.வி. ரிப்பேர் பார்க்க முடியும்?''

''அ... அண்ணனுக்கு... எதிலுமே... அவசரம் தான்... ஒரே... ச... ச... சமயத்துல ரெண்டு வேலை பார்க்கிறது... அ... அவரோட மேனரிஸம்...''

''என்ன மேனரிஸம்? படிச்சிருக்கார்... புத்தி வேண்டாம்...? டி.வி. சர்க்யூட்ல எக்கச்சக்கமான வோல்டேஜ் கரண்ட் வரும்ங்கிற சின்ன விஷயம் கூடத் தெரியாமே... கையை, உள்ளே விடறதா...?''

இன்ஸ்பெக்டர் திட்டிக் கொண்டே நகர - கவரோரமாய்க் குறுகி விழுந்திருக்கும் - அண்ணனின் உடலைப் பார்த்து - கதறி அழ ஆரம்பித்தாள் ரசிகா.

★